www.padippakam.com

வானவில்

VAANAVIL
ISSUE – 44 AUGUST 2014

இதழ் - 44 ஆவணி 2014

# இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மோடி அரசின் அணுகுமுறை என்ன?

அண்மையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஐவர் அடங்கிய தூதுக்குழு ஒன்று அதன் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் இந்திய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் புதுடெல்கி சென்று வந்துள்ளது. அங்கு அவர்கள் இந்தியாவின் புதிய பிரதம மந்திரி நரேந்திர மோடியையும், வெளிவிவகார அமைச்சர் ஸ்ரீமதி சுஸ்மா சுவராஜையும் சந்தித்து இலங்கைத் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாகக் கலந்துரையாடியுள்ளனர்.

புதுடெல்கியில் இருந்து திரும்பும் வழியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தூதுக்குழு சென்னையில் தங்கி தமிழக முதல்வர் செல்வி ஜெயராம் ஜெயலலிதாவைச் சந்திக்க முயன்றதாயினும் அது சாத்தியப்படவில்லை. டெல்கியில் முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்தித்த தூதுக்குழு, சென்னையில் முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதியைச் சந்திக்க முயன்றதாகவும் தெரியவில்லை.

அதுமாத்திரமின்றி, புலிகளின் தமிழக ஆஸ்தான ஆதரவாளர்களான வை.கோபாலசாமி, பழ.நெடுமாறன், ராமதாஸ், தொல்.திருமாவளவன், விஜயகாந் போன்றோரையும் சந்திக்க முயன்றதாகத் தெரியவில்லை. இவர்களைச் சந்தித்தால் ஜெயலலிதாவின் கோபத்துக்கு ஆளாகலாம் என்று பயந்தார்களோ என்னவோ?

எனவே, தமிழகத்திலும் மீண்டும் பாரதீய ஜனதாக் கட்சியின் முக்கியஸ்தர்களையே சந்தித்துவிட்டு கொழும்பு திரும்பியுள்ளனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் இந்திய விஜயம் குறித்து கூட்டமைப்பினர் ஒருவிதமான கருத்துக்களையும், கொழும்பு சிங்கள – ஆங்கில ஊடகங்கள் இன்னொரு விதமான கருத்துகளையும்



சித்தரித்து வருகின்றன. இது சாதாரண தமிழ் பொதுமக்கள் மத்தியில் கருத்துக் குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளதைக் காண முடிகிறது.

நரேந்திர மோடியின் புதிய இந்திய அரசாங்கம் தமிழ் கூட்டமைப்பினரை அழைத்துப் பேசியது ஒரு திருப்புமுனையெனவும், இனி இலங்கைத் தமிழர்களுக்கு இந்திய அரசால் நிச்சயம் விமோசனம் ஏற்படப்போகிறது என்றும் கூட்டமைப்பினர் வழமைபோல பிரச்சாரம் செய்து தமிழ் பொதுமக்களை ஏமாற்றுவதையும் அவதானிக்க முடிகிறது.

தாம் பதவி ஏற்று மூன்று மாதங்களுக்குள் இந்தியப் பிரதமர் தமிழ் தேசியக் கூட்டமைப்பை அழைத்து கலந்துரையாடியமை நிச்சயமாக ஒரு முக்கிய விடயம்தான். ஆனால் அதற்கான காரணம் வெறுமனே இலங்கைத் தமிழர் நலனில் உள்ள அக்கறை மட்டுமே என்று சொல்லிவிட முடியாது. அதற்கு அப்பாலும், சொல்லப்போனால் அதுவே அடிப்படையான விடயமாக வேறு சில பிரச்சினைகளும் இருக்கின்றன.

ஏனெனில் இலங்கைத் தமிழர் பிரச்சினை இந்தியாவைப் பொறுத்தவரை மத்தியில் ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு ஆட்சியாளர்களுக்கும் இரு பரிமாண முக்கியத்துவம் உடையவை. ஒன்று, வெளி சக்திகளின் ஆதிகத்துக்கு அது வழிவகுக்கும் என்பது. மற்றது இந்தியாவின் தென்பகுதியில் வாழும் ஏழு கோடி தமிழர்களின் உணர்வலைகளில் அது பாதிப்பு ஏற்படுத்தும் என்பது.

வெளி சக்திகளின் தலையீட்டுக்கு அது துணைபோகும் என்பதால்தான், 1977இல் இலங்கையில் பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அமெரிக்க சார்புப் போக்கை கட்டுப்படுத்துவதற்காக இந்திராகாந்தியின் அரசு இலங்கை தமிழ் இளைஞர் இயக்கங்களுக்கு ஆயுதப் பயிற்சியையும், பிற உதவிகளையும் வழங்கியது. அதனால் எந்தப் பயனும் விளையவில்லை என்பது வேறு விடயம். ஏனெனில் இந்திராகாந்தி எதிர்பார்த்ததிற்கு மாறாக மேற்கத்தைய சக்திகள் இலங்கை அரசுக்குப் பதிலாக புலிகளை தமது கையாளாக மாற்றிக் கொண்டனர்.

அதன்பின்னர் வந்த மன்மோகன்சிங் தலைமையிலான காங்கிரஸ் அரசோ, இன்றைய நரேந்திர மோடியின் அரசோ அமெரிக்காவின் உற்ற நண்பர்கள். அதுமாத்திரமின்றி, புலம்பெயர் நாடுகளில் உள்ள புலி ஆதரவுச் சக்திகளோ, தமிழகத்தில் உள்ள புலி ஆதரவு கட்சிகளோ, இலங்கையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பெரும்பாலான உறுப்பினர்களோ கூட அமெரிக்க மற்றும் மேற்கத்தைய தீவிர ஆதரவாளர்கள்தான்.

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க..



படிப்பகம்

www.padippakam.com

# ஐ. நா. மனித உரிமை ஆணையகம் விசாரணையை ஆரம்பித்தது

**2002** ஆண்டு பெப்ரவரி மாதம் 22ந் திகதியிலிருந்து 2011 ஆண்டு நவம்பர் மாதம 15ந் திகதி வரையிலான காலப்பகுதியில் இலங்கையில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகத்தின் நிபுணர்கள் குழுவினர் தமது பணிகளை ஆரம்பித்து விட்டனர். இதனை ஒகஸ்ட் 1ம் திகதி ஐ.நா. மனித உரிமை ஆணையகம் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது. அமெரிக்காவினால் வரையப்பட்டு கடந்த மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக மூவர் கொண்ட நிபுணர்கள் குழு ஒன்று முதலில் அமைக்கப்பட்டது. இந்தக் குழுவில் பின்லாந்தின் முன்னாள் ஜனாதிபதி மார்டி அதிசாரி (Mr. Martti Ahtisaari), நியூசிலாந்தின் முன்னாள் நீதிபதி சில்வியா கார்ட்ரைட் (Ms. Silvia Cartwright), பாகிஸ்தானின் சட்ட நிபுணர் அஸ்மா ஜகாங்கீர் (Ms. Asma Jahangir) ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

முள்ளிவாய்க்காலில் புலிகள் முற்றுமுழுதாக தோற்கடிக்கப்பட்ட பின்னர், யுத்தத்தில் நேரடியாக சம்பந்தப்பட்ட சகல தரப்பினராலும் நிகழ்த்தப்பட்ட வன்முறைகள் பற்றி விரிவான விசாரணை வேண்டும் என்பது பலதரப்பினராலும் உணரப்பட்டது. எனினும் எந்த காலகட்டத்தில் இருந்து அதனை ஆரம்பிப்பது என்பதை எவராலும் நிர்ணயிக்க முடியாமலிருந்தது.

தமிழ் இளைஞர்களின் இலங்கை அரசுக்கு எதிரான முற்றுமுழுதான ஆயுதப்போராட்டம் குறைந்தது 26 (1983 – 2009) வருடகால வரலாற்றினைக் கொண்டது. தரப்படுத்தலுக்கு எதிராக ஆவேச முழக்கங்களிட்டு, 1972 ஆண்டிலிருந்தே தமிழ் தலைவர்கள் தமிழ் இளைஞர்களை வன்முறைப் பாதைக்கு தூண்டிய வண்ணமிருந்தனர். இதனால் அக்காலத்திலிருந்தே தமிழ் இளைஞர்கள், தமிழரசுக்கட்சி சாராத தமிழ் அரசியல்வாதிகளின் வீடுகள், பொலிஸ் ஜீப், பஸ் போன்றவற்றிற்கு கல் எறிவது, தீவைப்பது போன்ற சிறியளவிலான வன்முறைகளில் ஈடுபட ஆரம்பித்தனர். இதனால் அக்காலத்தில் தமிழ் இளைஞர்கள் பொலிசாரினால் கைது செய்யப்படுவதும் சிறைகளில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதும் இருந்தது.

1975 ஆண்டு யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பா சுட்டுக்கொல்லப்பட்டதிலிருந்து 1983 ஆண்டு யூலை இனவன்முறை வெடிக்கும் வரை, இலங்கை அரசுக்கெதிராக அரசியல் தத்துவார்த்த ரீதியாக ஆயுதப்போராட்டத்தை முன்னிறுத்திய தமிழ் இளைஞர் இயக்கங்களினால் பல பொலிசாரும் இராணுவத்தினரும் மற்றும் சில அரச சார்பு தமிழ் அரசியல்வாதிகளும் கொல்லப்பட்டு, வங்கிகளும் கொள்ளையடிக்கப்பட்டன. இந்த சம்பவங்களோடு நேரடியாக தொடர்புடையவர்கள், ஏதோவிதத்தில் உடந்தையாக இருந்தவர்கள், அல்லது வெறும் சந்தேகத்தின் பேரிலும் பலர் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நீண்டகாலத் தடுப்பில் வைக்கப்பட்டனர். இவ்வாறு வெலிக்கடை சிறையில் வைக்கப்பட்டிருந்த இவர்களில் ஒரு பகுதியினர் (53 பேர்), 1983 யூலையில் படுகொலை செய்யப்பட்டனர்.

இலங்கையில் இனமோதல்கள் உருவாகிய காலங்களிலிருந்து நிகழ்ந்த மனித உரிமை மீறல்களை முறையாக விசாரிக்க வேண்டுமெனில் 1972 ஆண்டில் இருந்தல்ல, 1958 ஆண்டு இனவன்முறையிலிருந்தே ஆரம்பிக்க வேண்டுமென்று கூறுபவர்களும் இருக்கிறார்கள். இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கு அரசியல் ரீதியாக எந்தவித முன்னெடுப்புகளும் எடுக்கப்படாத போதும், கடந்த 5 வருடங்களாக இலங்கையில் யுத்தமில்லாத அமைதியொன்று நிலவுகின்றது. இந்த நிலையில் 2009 மே மாதத்திற்கு முன்னர் சகல தரப்பினராலும் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் அனைத்தையும் மென்று விழுங்கவும் முடியாது. அதற்காக ஒரு சாராரை குற்றஞ்சாட்டி, மறு சாராரிற்கு மன்னிப்பும் வழங்கவும் முடியாது. யுத்தம் முடிந்த பின்னரான 2½ வருட காலத்தினை விசாரிக்க இருப்பதானது, அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்தின் பின்னால் அரசியல் நிரலொன்று இருப்பதை தெளிவாகக் காட்டுகின்றது.

இலங்கை அரசு ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினை நிராகரித்து, ஐ.நா. விசாரணைக்குழு இலங்கைக்கு வருவதற்கு அனுமதி வழங்க மறுத்துமுள்ளது. இலங்கையின் உள்நாட்டு பிரச்சனையில் அந்நிய சக்திகள் மூக்கு நுழைப்பதற்கு அனுமதிக்க முடியாதென்ற அடிப்படையிலே ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தலையீட்டினை இலங்கை அரசு எதிர்க்கின்றது. இதனால் 10 பக்கங்களுக்கு மேற்படாது எழுத்து மூலமாக முறைப்பாடுகளை தெரிவிக்கலாமென ஐ.நா. விசாரணைக்குழு அறிவித்துள்ளது.

உலகெங்கிலும் மனித உரிமை மீறல்களையும் மற்றும் போர்க்குற்றங்களையும் தான் செய்வதோடு நின்றுவிடாது, 65 வருடங்களாக இஸ்ரேல் செய்யும் மனித உரிமை மீறல்களிற்கும் போர்க்குற்றங்களிற்கும் ஆசிர்வாதம் வழங்கி, அவ்வப்போது ஐ.நா. சபையில் இஸ்ரேலிற்கு எதிரான பிரேரணைகளுக்கு தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தும் அமெரிக்கா, இலங்கையில் ஏறத்தாள 10 ஆண்டுகால மனித உரிமை மீறல்களையும் போர்க்குற்றங்களையும் மாத்திரம் விசாரிப்பதற்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையை முடுக்கி விட்டிருப்பதானது, இலங்கை அரசுடான 'வேறொரு' பிணக்கினை தீர்ப்பதற்காகவே. *

## வானவில்

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com


படிப்பகம்

www.padippakam.com

# 1994 முதல் 2014 வரையிலான அரசியல் போக்குகள் சம்பந்தமான ஒரு மதிப்பீட்டு நோக்கு

- இலங்கை கம்யூனிஸ்ட கட்சியின் 20ஆவது தேசிய மாநாட்டு அறிக்கையிலிருந்து -




**1950**இன் நான்காம் தேசிய மாநாட்டின் அரசியல் ஆய்விற்கு அமைய தரகு முதலாளி வர்க்கத்திற்கும் தேசிய முதலாளி வர்க்கத்திற்கும் இடையே அமைந்த முரண்பாடுகள் தீவிரம் அடைந்து, தேசிய முதலாளித்துவத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் அமைப்பு உருவாகும் நிபந்தனைகளை நாம் அன்று கண்டோம். அன்று எமது கட்சியின் உபாய மார்க்கத்திற்கும், லங்கா சமசமாஜக் கட்சியின் உபாய மார்க்கத்திற்கும் இடையேயான அடிப்படை வேறுபாடு இதுவாகவே இருந்தது.

ஐக்கிய முன்னணி பற்றிய கருத்தியல் இவ்வாறாகவே கட்டியெழுப்பப்பட்டது. 1951இல் சிறீலங்கா சுதந்திரக் கட்சி உருவாக்கப்பட்டு 63 ஆண்டுகள் கடந்துபோய் விட்டன. இக்காலகட்டத்தில் ஏகாதிபத்திய – எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்டம் பாரிய கடமைகளை ஆற்றியிருந்தது. 1950இல் நாம் மேற்கொண்ட உபாய மார்க்கங்கள் ஊடாகவே அவற்றை நாம் வெற்றிகொள்ள முடிந்தது.

இக்காலகட்டத்தில் இலங்கை, பொருளாதார – சமூக மற்றும் கலாச்சார ரீதியாக சக்திவாய்ந்த முறையில் மாற்றத்திற்கு உள்ளாகியது. மறுபுறம் நாம் எதிர்பாராத வகையில், சோசலிச அரச முறைமை உடைக்கப்பட்டது. முதலாளித்துவ முறைமை உலகமயமாக மாறி, விஞ்ஞானம் – தொழில்நுட்பம் என்பனவற்றின் மூலம் மேற்படி உலகமயமாக்கல் விரிவடைந்து துரிதமாக மாறியது ஒரு யதார்த்தமாகும். ஒருமுனையாகச் செயற்பட்ட உலக செல்நெறி பன்முக உலகப் போக்காகப் படிப்படியாக மாற்றமடைந்து வருகின்றது. அதேசமயம் உலகத் தொழிலாளி வர்க்க இயக்கம் இச்செயற்பாட்டின் கட்டாய விளைவாகப் பலவீனமடைந்தது.

இச்சூழ்நிலையில் எமது எதிர்கால மூலோபாயங்கள் இடதுசாரி – ஜனநாயக முன்னணியைக் குறிக்கோளாகக் கொண்டு செயற்பட வேண்டி இருந்தது. இது 2013 விசேட தேசிய மாநாட்டில் எம்மால் தீர்மானிக்கப்பட்டது. இதற்கு அவசியமான நிபந்தனைகளைச் சிருஸ்டிக்கும் வகையில் இடைப்பட்ட காலத்தில் எமது கட்சியின் சமூக அடித்தளத்தைப் பேணிப் பாதுகாத்துக் கொண்டு, மேற்படி மூலோபாயத்திற்கு அமைய எமது தந்திரோபாயங்களை ஏற்புடைய வகையில் மாற்றிக்கொண்டு, எம்மால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நாம் தீர்மானித்தோம்.

இங்கு 1994 – 2014 வரையிலான காலகட்டத்தில் எமது பணிகளை ஆராய்ந்து பார்க்க வேண்டி உள்ளது.

1994 முதல் இன்றுவரை தொடர்ச்சியாக சிறீலங்கா சுதந்திரக் கட்சியை முதன்மையாகக் கொண்ட கூட்டமைப்பு அதிகாரத்தில் உள்ளது. 1994 – 2014 வரையிலான காலகட்டத்தில், சிறீலங்கா சுதந்திரக் கட்சியை முதன்மையாகக் கொண்ட முற்போக்கு, பெருமாற்றத்திற்கு உரிய சக்திகளோடு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்து கொண்டோம். 1977 – 1994 வரையிலான 17 ஆண்டு காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் முன்னெடுத்த பிற்போக்குத்தனமான, மக்கள் விரோத, ஆக்கிரமிப்பு ஆட்சிக்கு எதிராக ஒரு கூட்டமைப்பை உருவாக்குவதற்கு யதார்த்த நிலைமை எம்மை நிர்ப்பந்தித்தது. 1977இல் பிற்போக்குவாதம் மீண்டும் ஆட்சிபீடம்

www.padippakam.com

ஏறுவதற்கு இருந்த வாய்ப்பை நாம் அன்று குறைத்து மதிப்பீடு செய்தோம் என்பதைச் சுயவிமர்சன ரீதியாகக் குறிப்பிட வேண்டியுள்ளது.

சமாதானம், ஜனநாயகம் மற்றும் சமூக நீதி ஆகிய குறிக்கோள்களின் பாரிய கடமைகளை நிறைவேற்றினாலும், பாராளுமன்றத்தில் நிலவும் அதிகார சமநிலையின் வரையறைகளின் கீழ், எதிர்பார்த்த பணிகளை எம்மால் நிறைவேற்ற முடியவில்லை. போர்ச்சூழல் அதனைப் பாதித்த பாரிய காரணியாகும். உலக அதிகார சமநிலையின் மாற்றமும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. 2004இல் மிகப்பரந்துபட்ட கூட்டமைப்பு (ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு) உருவாக்கப்பட்டாலும், ஜே.வி.பியை இணைத்துக் கொண்டு முன்னகர முடியவில்லை. 2004இல் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக இனவாதப் போக்கு மீண்டும் தலைதூக்கியது. இந்த நிலைமைகளின் கீழ் சிறீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியின் முரண்பாடுகளைப் பயன்படுத்தித் தமது ஆட்சி அதிகாரத்தை வலுப்படுத்துவதிற்கு செயற்பட்டது.

ஒருபுறம் அனுர பண்டாரநாயக்க, மங்கள சமரவீர, விஜயதாச ராஜபக்ஸ அணி எதிர்க்கட்சியில் இணையத் தீர்மானித்தது. மறுபுறம் அரசாங்கத்தின் பங்காளனாகச் செயற்பட்ட ஜே.வி.பி அரசில் இருந்து விலகிச் சென்று எதிர்க்கட்சி வரிசையில் அமரத் தீர்மானித்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் உள்முரண்பாடுகள் மிகத் தீவிரமடையவே, இடையிடையே ஐ.தே.கவின் வலதுசாரிப் பிரிவினர் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசில் இணைந்து கொண்டனர். அதனால் இனவாத அழுத்தங்களுக்கு மேலதிகமாக வலதுசாரி அழுத்தங்களும் அதிகரித்தன.

ஜே.வி.பிக்குள்ளும் முரண்பாடுகள் உச்சக் கட்டத்தை அடைந்தமையால், அதன் சில பிரிவினர் (விமல் வீரவன்ஸ – நந்தன குணதிலக) அரசுடன் இணைந்தனர். இவ்வாறாக ஜே.வி.பியில் இருந்து வந்த பகுதியினர் இடதுசாரி நிலைப்பாட்டை மேற்கொள்வதற்குப் பதிலாக, அரசை மென்மேலும் இனவாத நிலைப்பாட்டிற்கு இட்டுச் சென்றனர். வலதுசாரி – இனவாத சக்திகள் அரசாங்கத்திற்குள் பிரவேசிப்பதன் மூலம், அதிகார சமபலம் வலதுசாரிப் போக்கைக் கொண்டதாகவும், இனவாத நிலைப்பாடுகளைக் கொண்ட நிலைமைக்கும் தள்ளப்பட்டது.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை, மாவட்ட தேர்தல் முறைமை, விருப்பு வாக்கு முறைமை என்பன சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் உள் ஜனநாயகத்திற்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. கட்சிக்குள்ளும் அரசிற்குள்ளும் ஏற்படக்கூடிய முரண்பாடுகள் மேற்படி மூன்று முறைகளைப் பயன்படுத்தி சமநிலைப்படுத்தப்பட்டன.

2004இல் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அமைக்கப்பட்ட பின்னர் (சந்திரிகா குமாரதுங்கவின் கீழ்), இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி என்பன மேற்படி கூட்டமைப்பில் இணையாமல் இருக்கத் தீர்மானித்தன. எனினும் ஒட்டுமொத்த அரசியல் நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசோடு இணையத் தீர்மானித்தோம்.

ஜே.வி.பிக்கு பாராளுமன்றத்தில் 39 உறுப்பினர்கள் இருந்தனர். இச்சாதக நிலையைப் பயன்படுத்தி அரசாங்கத்தின் வலதுசாரி நிலைப்பாட்டைத் தோல்வியுறச் செய்வதற்கு ஜே.வி.பி முயலவில்லை. இதன் பெறுபேறாக இனவாத, இந்திய எதிர்ப்பு கருத்து நிலைக்கு இரையாகி இருந்த ஜே.வி.பி, தனது சமூக அடித்தளத்தை மாத்திரமல்லாது, கட்சி அமைப்பையும் பேணிப்பாதுகாக்க அதனால் முடியவில்லை. ஜே.வி.பியின் கருத்தியல் ரீதியிலான குழப்ப நிலையும், தம்மைப் பற்றி இருந்த அளவுகடந்த மதிப்பீடும் இவ்வீழ்ச்சிக்குக் காரணமாகும்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் செயற்பட்ட பெருமாற்றத்தை விரும்பும் பிரிவினரையும், இடதுசாரி அணிகளுடன் நெருங்கிச் செயற்படும் கட்டாயத் தேவையையும் ஜே.வி.பி புரிந்து கொண்டிருக்கவில்லை. இதன் இறுதி விளைவாக ஜே.வி.பி நான்கு கூறுகளாகப் பிளவுபட்டது. இதனை ஜே.வி.பி சுயவிமர்சன ரீதியாக ஆராய வேண்டியது அவர்களது வரலாற்றுக் கடமையாகும்.

1994, 2000, 2004, 2010 தேர்தல்களின் போது சமாதானத்தையும், ஜனநாயகத்தையும், சமூக நீதியையும் நிறைவேற்றுவதாக உறுதிமொழி கூறியே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசுகள் பதவிக்கு வந்தன. இந்த எதிர்பார்ப்புகளுக்குத் தடையாக இருந்த, பாரிய தாக்கங்களை ஏற்படுத்திய, காரணிகளை பின்வருமாறு அடையாளம் காண முடியும்.

- நிறைவேற்று ஜனாதிபதி முறைமை, மாவட்ட தேர்தல் முறைமை, விருப்பு வாக்கு முறைமை என்பன சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் உட்கட்சி ஜனநாயகத்திற்கு ஏற்படுத்திய தாக்கங்கள்.
- ஜே.வி.பியின் தவறான உபாய மார்க்கமும், இனவாத நிலைப்பாடும்
- ஐக்கிய தேசியக் கட்சியின் வலதுசாரிப் பிரிவினர் அரசாங்கத்துடனும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடனும் இணைந்தமை.
- அரசாங்கத்தோடு இணைந்த ஜே.வி.பியினர் இடதுசாரி நிலைப்பாட்டை எடுப்பதற்குப் பதிலாக, வலதுசாரிகளின் பலத்தை வலுப்படுத்தக்கூடிய வகையில் இனவாத நிலைப்பாட்டை எடுத்தமை.
- தொழிலாளி வர்க்கத்தின அழுத்தம் பலவீனமடைந்தமை.
- அரசாங்கத்திற்குள் இடதுசாரி, பெருமாற்றத்திற்குரிய, முற்போக்கு சக்திகளின் பலவீனமான நிலைமை.

2004இல் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் அமைப்பு ரீதியாக ஒன்றிணையாமல் இருப்பதற்கு நாம் மேற்கொண்ட முடிவு பிழையற்றது, வரலாற்று ரீதியானது என்பதை

www.padippakam.com

யதார்த்த உண்மைகள் நிரூபித்துள்ளன. அவ்வாறு எமது கட்சி ஒன்றிணைந்து இருந்தால், இன்று நாம் சுயாதீனமாகச் செயற்படும் வாய்ப்பை முழுமையாக இழந்திருப்போம்.

## மோதலுக்குப் பின்னரான அரசியல் வளர்ச்சி

போர் ஓய்ந்த பின்னர் சமாதானத்தையும் தேசிய ஐக்கியத்தையும் கட்டியெழுப்புவதற்கு வரலாறு ஒரு சந்தர்ப்பத்தை அரசாங்கத்திற்கு வழங்கினாலும், 5 ஆண்டுகள் கடந்த நிலையிலும் இதுவரை மேற்படி கடமைகளை நிறைவேற்றுவதில் அரசாங்கம் தோல்வி கண்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளுக்குள் பொருளாதார அபிவிருத்தியில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் வெற்றி கண்டுள்ளன.

புனர்வாழ்வளித்தல், மீள்குடியேற்றம், உட்கட்டமைப்பு வசதிகள், மொத்த உற்பத்தியின் அதிகரிப்பு, மிதிவெடிகளை அகற்றுதல் ஆகிய நிகழ்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாக அரசாங்கம் அமுல்படுத்தி உள்ளது. ஆனால் நேரடியாக மக்களின் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பிரச்சினைகள் மற்றும் தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான அரசியல் தீர்வை வழங்குதல் என்பன பற்றி ஆரம்ப நடவடிக்கைகளையேனும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை.

நாட்டில் நிலவும் அரசியல் அதிகார சமநிலை, அரசாங்கத்தில் நிலவும் அதிகார சமநிலை என்பன இதற்குக் காரணிகளாகும். இத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தேவையான அரசியல் தலைமை மிக உறுதியான திடசங்கற்பமின்றி, கொள்கைரீதியிலான நிலைப்பாட்டை எடுக்க அஞ்சியமை காரணமாகவும், விருப்பமின்மை காரணமாகவும், இத்தேக்க நிலை ஏற்பட்டுள்ளது.

வடக்கிலும் தெற்கிலும் செயற்படும் இனவாதச் சக்திகள், தமிழ் புலம்பெயர் சமூகம், தமிழ்நாட்டின் அழுத்தங்கள் என்பன இந்நிலைமை தொடர்பாகத் தாக்கம் செலுத்தும் புறக்காரணிகள் ஆகும்.

இதன் காரணமாக, மோதலுக்குப் பின்னரான நல்லிணக்கம் பற்றிய பிரச்சினை இன்று சர்வதேசமயமாக்கப்பட்டு உள்ளது. 2009, 2012, 2013 மற்றும் 2014ஆம் ஆண்டுகளில் ஜெனீவாவில் கூடிய ஐ.நா. மனித உரிமைப் பேரவை அமர்வுகளின் போது, இலங்கைக்கு எதிராகக் கடும் நிலைப்பாடு கொண்ட பிரேரணைகளை அங்கீகரிப்பதற்கு மேற்கு நாடுகளும், தமிழ் புலம்பெயர் சமூகமும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. எமது பொறுப்பையும், கடமைகளையும் உரிய முறையில் செய்ய முடியாமையினால் மேற்படி சக்திகளுக்குச் சாதகமான நிலைமைகள் உருவாக்கப்பட்டுள்ளன. கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவை நியமிக்க தாமதம் ஏற்பட்டதோடு, தாமதமடைந்தேனும் ஆணைக்குழுவின் அறிக்கையை முழுமையாகச் செயற்படுத்த முடியாமை மேற்படி பாதகமான நிலைமைக்கு மூலகாரணமாகும்.

நாட்டினுள்ளும், அரசாங்கத்தினுள்ளும் செயற்படும் இனவாத சக்திகளின் அழுத்தங்கள் இதற்குக் காரணமாக அமைந்துள்ளன.

இதன் பெறுறோக, ஒட்டுமொத்த மக்களையும் பாதிக்கக்கூடிய சர்வதேச அழுத்தங்களுக்கு இலங்கை ஆளாக வேண்டிய ஆபத்து உள்ளது. ஏகாதிபத்தியவாதிகளின் பூலோபாயக் குறிக்கோள்களையும், பூகோள அரசியல் தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு இந்நிலைமையை மிக உயர்ந்த மட்டத்தில் பயன்படுத்துவதற்கு ஏகாதிபத்தியவாதிகள் நடவடிக்கை எடுப்பர். தமிழ் மக்களின் உரிமைகளை வழங்குவதற்குப் பதிலாக, அந்த சாட்டில் ஏகாதிபத்தியவாதிகளின் உபாய மார்க்கத் தேவைகளின் நிமித்தம் நடவடிக்கை எடுக்கப்படுவதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

> சிந்தனை மனிதனை பற்றும்பொழுது அது பொருண்மை சக்தியாக மாறுகிறது.
>
> –மார்க்ஸ்

## எதிர்கால மார்க்கம்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் தற்போதைய பதவிக்காலம் 2016இல் முற்றுப் பெறும். இந்த நிர்வாகக் காலத்துக்குள் நான்கு ஆண்டுகள் கழிந்துள்ளன. எஞ்சியுள்ள இரண்டாண்டு காலகட்டத்திற்குள் அரசியல் வளர்ச்சி எவ்வாறு அமையும்?

சர்வதேச ரீதியாக ஜெனீவா மனித உரிமைப் பேரவை ஊடாகத் தோன்றியுள்ள பிரச்சினைகளுக்குப் போதிய தீர்வு வழங்கப்படாவிடின், நிலைமை மிகவும் மோசமாகி சிக்கலடைவதற்கான வாய்ப்புகளே அதிகம் உண்டு.

தேசிய ரீதியாக நோக்குகையில், பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டிருப்பினும் மக்களின் வாழ்க்கையில் இந்த அபிவிருத்தியின் பயன்கள் கிடைக்கவில்லை. வருமான இடைவெளி அதிகரித்துள்ளது. அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாச்சாரத் துறைகளில் ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகள் அரசின் மீது பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. இதன் காரணமாக அரசிற்குள்ளும், சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளும் முரண்பாடுகள் தோன்றியுள்ளன.

மறுபுறம் எதிர்க்கட்சிகளுக்கிடையேயும் பொதுவான இணக்கப்பாடு இல்லாத ஒரு சூழ்நிலையில் மாற்று ஆட்சிக்கான சமிக்ஞைகள் இன்னமும் தோன்றவில்லை.

அரசாங்கம் மும்மொழிக் கொள்கைகள், சட்டங்கள், கட்டளைகள் பற்றிச் செயற்படுகையில், அவை உழைக்கும் மக்களை முதன்மையாகக் கொண்ட பொதுமக்களுக்குச் சாதகமானவையா இல்லையா என ஆராய்ந்து பார்த்த பின்னரே எமது கட்சி முடிவெடுக்க வேண்டியுள்ளது. அதற்கமையவே கட்சியின் நிலைப்பாடு அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் எடுத்துக் கூறப்படும்.

எமது கட்சி தற்போதைய கூட்டரசாங்கத்திலிருந்து விலகுவதோ அல்லது அதற்கு விமர்சன ரீதியிலான ஒத்துழைப்பு வழங்குவதோ அல்லது இதுபற்றி கட்சித் தீர்மானம்


படிப்பகம்

www.padippakam.com

மேற்கொள்வதோ குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் நிலவும் சகலவிதமான காரணிகளையும் கவனத்தில் எடுத்து அளவிட்ட பின்னரே முடிவெடுக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்கையில், கட்சியின் விசேட மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட எமது கட்சியின் மூலோபாயங்களுக்கு அமையவே இத்தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். வெறுமனே அரசாங்கத்தில் ஒட்டிக் கொண்டிருப்பதோ அல்லது தேவை கருதி விலகிச் செல்லும் உரிமை காரணமாக அல்ல. (மூலோபாயங்களுக்கான இணைப்பைப் பார்க்கவும்)

இதனிடையே ஒரு 'தனிப் பிரச்சினை'யாக நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்ற கருத்து வளர்ச்சியடைந்து வருகிறது. இது எந்த வகையில் வளர்ச்சியடையும் என்பதை அளவிட்டுக் கூற முடியாது. முதலாளித்துவ வர்க்கத்திடையே இதுபற்றிய பொதுக்கருத்து இதுவரை உருவாக்கப்படவில்லை. மறுபுறம் முற்போக்கு சக்திகளிடையேயும் இதுபற்றிய பொது இணக்கப்பாடு உருவாக்கப்படவில்லை.

மக்களுக்கும் அரசுக்குமிடையே நிலவும் முரண்பாடு உயரும் மட்டத்திற்கு அமையவே எதிர்கால அரசியல் வளர்ச்சியும், அணிதிரளலும் ஏற்படும். எதிர்வரும் ஓரிரு ஆண்டுகளில் பொதுத் தேர்தலும், ஜனாதிபதித் தேர்தலும் அரசிலமைப்புப்படி நடந்தே ஆக வேண்டும். எனவே அரசியல் சக்திகளின் புதிய அணி திரள்தலைக் காண முடியும்.

இந்த அணி திரள்தல் ஏகாதிபத்திய – எதிர்ப்புப் போராட்டத்திற்கும், தேசிய ஐக்கியத்திற்கும், ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கும், அரசியல் அமைப்பு ரீதியிலான மறுசீரமைப்பிற்கும், நல்லாட்சிக்கும், மக்களுக்குச் சார்பான பொருளாதாரக் கொள்கைகளுக்கும் உழைக்கும் மக்கள் சாதகமாக அணிதிரள்வதை மேற்கொள்ள வேண்டும். இது இலங்கை இடதுசாரி இயக்கத்தின் மீது வழங்கப்பட்டுள்ள வரலாற்றுக் கடமையாகும். முற்போக்கு – ஜனநாயக சக்திகளின் ஒருங்கிணைப்பு மூலமும், குறிப்பாகத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் கூட்டுச் சேர்தலின் கூடாக, தத்துவத்தை நடைமுறையுடன் இணைத்துக் கொண்டு வரலாற்றை யதார்த்தபூர்வமாக எதிர்கொள்ள வேண்டுமெனக் குறிப்பிடுகின்றோம்.

சுதந்திரத்தின் பின்னர் எமது நாட்டின் வரலாறு முழுவதும், இத்தகைய அணிதிரட்டலுக்கான தலைமைத்துவத்தை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உட்பட இடதுசாரி இயக்கத் தலைமைத்துவம் வழங்கியுள்ளது. இன்றைய நெருக்கடியின் போதும் அதற்குத் தலைமைத்துவம் வழங்கும் பொறுப்பு சோசலிச மக்கள் முன்னணியை முதன்மையாகக் கொண்ட இலங்கையின் இடதுசாரி இயக்கத்தையே சாரும்.

(இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 20ஆவது தேசிய மாநாடு 2014 யூலை மாதம் 25, 26, 27 ஆகிய திகதிகளில் இரத்தினபுரி நகரில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் டியூ குணசேகர சமர்ப்பித்த அரசியல் அறிக்கையின் முக்கிய சில பகுதிகள் எமது வாசகர்களுக்காக மேலே தரப்பட்டுள்ளன. அறிக்கையின் மேலும் சில முக்கிய பகுதிகள் அடுத்த இதழிலும் (செப்ரெம்பர்) இடம் பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**- ஆசிரியர் குழு - வானவில்)**

---

உயிரினங்கள் ஒருவரால் படைக்கப்பட்டன என்றால் அந்த படைத்தவர் எப்படித் தோன்றினார்? அவருக்கு நோக்கம் உண்டு, ஆனால் உடல் இல்லை என்று சொல்லப்படுகிறது. பொதுவாக இவர் அல்லது இது கடவுள் என்று அறியப்படுகிறது. அவர் இயற்கையாகத் தோன்றினாரா? அவர் இயற்கையாகத் தோன்ற முடியும் என்றால் ஏன் உயிரினங்கள் தாங்களே இயற்கையாகத் தோன்றி இருக்கக் கூடாது?

**-டார்வின்**

# ஈராக்கில் சித்திரவதை: பிரிட்டிஷ் இராணுவத்தினர் மீது மீண்டும் போர்க்குற்ற விசாரணை

ஈராக்கில் பிரிட்டிஷ் இராணுவத்தினர் செய்த சித்ரவதைகள் பற்றி சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மீண்டும் விசாரணைகளைத் துவங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் இராணுவத்தின் மூத்த அதிகாரிகள் மற்றும் சில அரசியல் தலைவர்களும் விசாரிக்கப்படுவார்கள் என்று தெரிகிறது.

2006ஆம் ஆண்டு நிறுத்தப்பட்ட இந்தப் போர்குற்ற விசாரணையை மீண்டும் துவங்கப்போவதாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் வழக்கறிஞர் ஃபடு பென்சவுடா நேற்று இதனை அறிவித்துள்ளார்.

2003ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டு வரை பிரிட்டீஷ் ராணுவம் ஈராக் கைதிகளை கடுமையாக சித்ரவதை செய்துள்ளதான இந்த விவகாரம் தற்போது மீண்டும் விசாரணைக்கு வரவுள்ளது.

பிரிட்டீஷ் ராணுவத்தினரின் சித்ரவதைக்கு ஆளான சுமார் 412 கைதிகளுக்கு ஆதரவாக பொதுநல வழக்கறிஞர்கள் நிறுவனம் இந்த விசாரணையைக் கோரியுள்ளது.

கைதிகளை கடுமையான உடல், மன சித்ரவதைகளுக்கு பிரிட்டீஷ் ராணுவம் ஆளாக்கியதாக அந்த நிறுவனம் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளது.

கைதிகளை தூங்க விடாமல் செய்வது, உணர்ச்சிகளை மழுங்கடிக்கும் சித்ரவதைகள், கொன்று விடுவதான அச்சுறுத்தல், கற்பழிப்பு செய்துவிடுவதான அச்சுறுத்தல் என்று பல்வேறு விதங்களில் பிரிட்டீஷ் ராணுவம் அங்கு தன் கைவரிசையைக் காட்டியுள்ளதாக தெரிகிறது.

இந்தக் குற்றச்சாட்டுகளை பிரிட்டிஷ் அரசு மறுத்துள்ளது. தலைமை வழக்கறிஞரான டொமினிக் கிரீவ் இது பற்றி கூறுகையில், இந்த குற்றச்சாட்டுகளை முழுதும் நிராகரிப்பதாகவும், பிரிட்டீஷ் நீதித் துறை இதனை தக்கவிதத்தில் எதிர்கொள்ளும் என்றும் கூறியுள்ளார்.

**நன்றி: த இந்து**

www.padippakam.com

# ஐக்கிய இராச்சியம் ஒரு "மோசடிக்கார அரசு" (Rogue State), "உலகிற்கு ஆபத்து"!



Craig Murray

**ஐ**க்கிய இராச்சியம் (பிரித்தானியா) ஒரு மோசடிக்கார அரசு என்றும், அதனால் உலகத்திற்கு ஆபத்து என்றும், உஸ்பெக்கிஸ்தான் நாட்டுக்கான முன்னாள் பிரித்தானியத் தூதுவர் கிறெய்க் மூரே (Craig Murray) தெரிவித்துள்ளார்.

"பிரித்தானிய அரசு மிக மிக நியாய விரோத ஒன்றாகும். தமது நன்மைக்காக வெளிநாடுகளில் எவ்வளவு மக்களைக் கொன்றொழித்தார்கள் என்பதைப் பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. (ஸ்கொட்லாந்து சுதந்திரம் பற்றிய) வாக்களிப்பில் யாராவது இல்லை என வாக்களித்தால், அது உலகத்திற்கு ஆபத்தான, ஒரு மோசடிக்கான அரசுக்கான, ஒரு சிலரைச் செல்வந்தர்கள் ஆக்குவதற்காக யுத்தத் தயாரிப்புகளில் ஈடுபடுகின்ற ஒரு நோய்வாய்ப்பட்ட அரசுக்கு ஆதரவளிப்பதாகவே அமையும்".

இவ்வாறு மூரே இன்னும் மூன்று வாரங்களில் ஸ்கொட்லாந்தின் சுதந்திரம் சம்பந்தமான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வாக்களிப்பு நடைபெறவிருப்பது சம்பந்தமாகப் பேசும்போது கூறினார்.

சென் அன்றூஸ்சில் நடைபெற்ற பகிரங்கப் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய அவர், ஒரு மூத்த இராஜதந்திரி என்ற வகையில் இந்த நடவடிக்கைகளின் ஒரு சாட்சியாகத் தான் இருப்பதால் தனது "உலகக் கண்ணோட்டம்" மாறியதாகவும், அதனால் இப்பொழுது "ஐக்கிய இராச்சியம் குறித்து பெருமை கொள்வது சாத்தியமில்லை" என்றும் கூறினார்.

"ஐக்கிய இராச்சியம் குறித்து பெருமை கொள்வது சாத்தியமில்லை என நான் நினைக்கிறேன். எப்பொழுது நாம் ஈராக்கிற்குள் நுழைந்து ஐ.நாவுக்கு எதிராகச் செயல்பட்டோமோ, அது ஹிட்லரும் முசோலினியும் நாடுகளின் சங்கத்திற்கு (League of Nations) எதிராகச் செய்ததிற்கு ஒப்பாகும்" என்று மூரே கூறினார்.

"நீங்கள் லிபியாவைப் பார்ப்பீர்களானால், அங்கு சேர்ட்ரி (Sirte) என்ற இடத்தில் நடைபெற்ற நேட்டோவின் குண்டுவீச்சின் போது நாம் 15,000 மக்களைக் குண்டுவீசிக் கொன்று பேரழிவை ஏற்படுத்திவிட்டு, அதை மறைத்திருக்கிறோம் என நான் நினைப்பதுடன், அதுபற்றி அவர்கள் பிபிசியிலும் உங்களுக்கு ஒருபோதும் எதுவுமே சொல்லவில்லை. இதனால் எம்மால் ஏதாவது நன்மையை ஏற்படுத்த முடிந்ததா? இல்லை".

"ஐக்கிய இராச்சியத்தின் வெளிநாட்டுத் தலையீடுகள் யாவும் எப்போதும் பெரும்பாலும் மூலவளங்களைக் (Resources) குறியாகக் கொண்டவையாகும். இந்த விடயங்களை நான் உள்ளிருந்தே பார்த்து வந்துள்ளேன். அதன் ஒவ்வொரு செயல்பாடும் ஊழல் நிறைந்தது. இது ஒரு அறிவுபூர்வமான நிர்மாணமல்ல. அமைப்பு முறையே நாற்றமெடுக்கிறது" என முன்னாள் பிரித்தானியத் தூதுவர் குறிப்பிட்டார்.

"சுதந்திரத்துக்கான ஆங்கிலம்" என்ற பிரித்தானியாவில் பிறந்து ஸ்கொட்லாந்தின் சுதந்திரத்தை ஆதரித்துக் கொண்டு, ஸ்கொட்லாந்தில் வாழுகின்ற குழுவின் ஒரு அங்கத்தவரான மூரே கூறுகையில், முன்பு தான் ஒரு பிரித்தானியப் பிரஜை என்பதற்காகப் பெருமைப்பட்டதாகவும், ஆனால் எப்பொழுது பிரித்தானியா ஈராக்கை ஆக்கிரமித்து, அதைப் பல துண்டுகளாகப் பிரித்தெறிந்து, அந்த நாட்டு மக்களைச் சித்திரவதை செய்ததில் சம்பந்தப்பட்டிருப்பதை அறிந்தேனோ, அதன்பின்னர் எனது தேசத்துக்கான விசுவாசத்தை மாற்றிக் கொண்டேன் என்றார்.

"நான் 20 ஆண்டுகளாக பிரித்தானிய இராஜதந்திரியாக இருந்திருக்கிறேன். நான் எப்பொழுதும் பிரித்தானியா மீது தேசபக்தி மிக்கவனாக இருந்ததுடன், அதையிட்டு மிகமிகப் பெருமைப்பட்டும் இருக்கிறேன்" என்று அவர் கூறினார்.

"நான் முதன்முதலாக பிரித்தானிய இராஜதந்திரியாகப் பதவி ஏற்று யூனியன் ஜாக் (Union Jack) கொடி பறந்த எனது சொந்தக் காரில் அமர்ந்து பிரயாணம் செய்தபோது, பெருமையின் உச்சத்தில் இருந்ததால், உணர்ச்சியின் உச்சத்தால் எனது தொண்டை அடைப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது. அது எனக்கு பெருமைக்குரிய கணப்பொழுதாக இருந்தது. ஆனால் இது ஆறு மாதங்கள் மட்டுமே. அதன் பின்னர் நான் தூதுவராகப் பதவி வகித்துக் கொண்டிருந்த நாட்டின் மக்களை நாமும் அமெரிக்கர்களும் கப்பல்களில் ஏற்றிக் கொண்டிருந்தோம். ஏனெனில் அவர்களைச் சித்திரவதை செய்யவும், அவர்களில் சிலரைச் சித்திரவதை செய்து கொல்வதற்கும் என்பதைக் கண்டு கொண்டேன்" என்று மூரே கூறினார்.

"நீங்கள் நினைப்பதைப் போன்று இப்பொழுது எனது உலகக் கண்ணோட்டம் மாறியுள்ளது" என்றார் அவர்.

"அதேநேரத்தில் ஒரு மாதம் கழித்து பாதுகாப்புச் சபைக்கு மாறாக ஈராக்கிற்குள் நுழைந்தோம். பாதுகாப்புச் சபைக்கு இந்த விடயம் கொண்டு போகப்பட்டிருந்தால் அதிகப்படியான வாக்குகளால் அது தடுக்கப்பட்டிருக்கும் என்பது எங்களுக்கு நன்கு தெரியும்" என மூரே மேலும் கூறினார்.

"நான் தலைமை தாங்கிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாயக் காரியாலயப் பிரிவே

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க..

www.padippakam.com

# வானவில் நோக்கி வந்த கடிதங்கள்:

### கடிதம்: 1

ஆசிரியர்
வானவில்
கனடா

உங்கள் வானவில் பத்திரிகை பற்றி பின்வரும் விடயங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

1. காலம் தாழ்த்தினாலும் பத்திரிகை கிடைக்கும். தினமுரசு சில பகுதிகளை முதலிலே பிரசுரித்து விடும். குறிப்பாக ஆசிரிய தலையங்கம் மற்றது தமிழ் அரசியல் போக்குகள்.

2. எங்கள் உள்ளூர் புதினம் மற்றும் விடயங்கள் இடம் பெறுவதில்லை என்ற குற்றச்சாட்டும் உண்டு.

3. மகிந்தா சார்பு என்ற ஆதங்கமும் உண்டு. குறிப்பாக யூ.என்.பி எதிர்ப்புக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுப்பதாக விமர்சனம் உண்டு.

4. இங்கு ஒரு சிலரே வாசிப்பார்கள். பரந்த அளவில் போவது இல்லை. ஆனால் கனடாவிலிருந்து வந்த தோழர் ஒருவர் இங்கு கூடுதலான பத்திரிகை வர ஏற்பாடு செய்துள்ளார்.

5. பழைய பரம்பரை சார்ந்த விடயங்கள் மக்களை கவர்வதில்லை. சமகால விடயங்களே கவனத்தை ஈர்க்கும்.


6. எங்கள் செய்திகள் மற்றும் தரவுகளை தங்கள் பத்திரிகையில் பயன்படுத்தவும்.

எஸ்.சிவபாலன்
யாழ்ப்பாணம்

### கடிதம்: 2

ஐயா,

வானவில் ஆடி மாத இதழ் படித்தேன். குறிப்பாக இரண்டு கட்டுரைகள் என்னைக் கவர்ந்தன. ஒன்று இலங்கையில் அடுத்தடுத்து கொண்டு




வரப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டங்கள். டயஸ் பண்டார நாயகா காலத்தில் தான் அடிப்படையிலான மாற்றம் செய்யப்பட்டது என்பது என் ஞாபகம்.

மீனவர் பிரச்சினை பற்றிய கட்டுரை நன்றாகவே விளக்கப்பட்டுள்ளது. தமிழக மீனவர் எல்லை மீறி மீன் பிடிப்பதைப் பற்றி இங்கு யாருமே பேசமாட்டேன் என்கிறார்கள். ஓட்டு விஷயம் என்பதால் போட்டி அரசியல் நடக்கிறது.

என்னுடைய வலைத் தளத்தை தாங்கள் கண்டிருக்கலாம். அது முற்றிலும் அறிவியல் தொடர்பானது. உலகில் பல நாடுகளிலும் உள்ள இலங்கைத் தமிழர்களும் எனது வாசகர்களாக இருப்பதில் எனக்கு மகிழ்ச்சி. தங்களுடைய இதழில் அல்லது வேறு தமிழ் இணைய தளத்தில் எனது வலைப்பதிவுக்கு Link கொடுக்க இயலுமா என்று பரிசீலிக்க வேண்டுகிறேன்.

அன்புடன்
ராமதுரை
எனது வலைப்பதிவின் முகவரி:
www.ariviyal.in
(முகவரி தரப்படவில்லை)

வெற்றியோ தோல்வியோ எதுவரினும் கடமையைச் செய்வோம். யார் பாராட்டினாலும், பாராட்டாவிட்டாலும் கவலை வேண்டாம். நமது திறமையும், நேர்மையும் வெளியாகும்போது பகைவனும் நம்மை மதிக்கத் தொடங்குவான்.

**-பி.ஆர்.அம்பேத்கர்-**

# நீரிழிவு வியாதியைக் கட்டுப்படுத்தும் பால்!

மனிதர்கள் ஒவ்வொருவரும் தினமும் போதியளவு பால் அருந்துவது மிகவும் அவசியமானது எனவும், ஏனெனில் பாலில் மனித உடலுக்குத் தேவையான 16 வகையான அத்தியாவசிய சத்துக்கள் அடங்கியுள்ளன எனவும் புதிய ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

பாலில் கல்சியமும், விற்றமின் D சத்தும் உள்ளது என்பது பரவலாக எல்லோருக்கும் தெரிந்த விடயம். ஆனால் அதில் உயர்தரமான புரதம், பொற்றாசியம், மக்னீசியம், விற்றமின் A, விற்றமின் B12, துத்தநாகம் (Zinc) உட்பட பலவிதமான விற்றமின்கள், தாதுப் பொருட்களும் அடங்கியுள்ளன.

இவற்றை விட இன்னொரு முக்கியமான விடயம் என்னவெனில், நீரிழிவு நோய் ரகம் 2-யும் தடுப்பதில் பால் முக்கிய பங்கு வகிப்பதாக புதிய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பாலில் உள்ள Glycemic என்ற குறைந்தளவான தாதுப் பொருள், நீரிழிவு ரகம் - 2 நோயாளிகளின் இரத்தச் சர்க்கரை அளவை சமச்சீராக வைக்க உதவுகிறது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

மனிதன் இந்த மண்ணில் தோன்றி ஆடு, மாடு, எருமை, கழுதை, ஒட்டகம் போன்ற பால் தரும் மிருகங்களை வளர்க்கத் தொடங்கிய நாளிலிருந்து பாலை அருந்துவதுடன், மனித உடலின் ஆரோக்கியத்திற்கு அதன் முக்கியத்துவம் என்ன என்பதையும் அறிந்திருந்த போதிலும், இன்று உலகம் முழுவதும் உள்ள வளர்ந்த மக்களில் மூன்றில் இரண்டு பங்கினர் போதியளவு பால் அருந்துவதில்லை என்ற தகவலும் ஆய்வில் தெரிய வந்துள்ளது.

*

www.padippakam.com

# இந்திய நீதித்துறையை 18 வருடங்களாக ‘சிப்பிலியாட்டிய’ ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கு முடிவுக்கு வருகிறது?

தமிழகத்தின் முடிசூடா ராணியாகத் திகழ்கிறார் முதலமைச்சர் ஜெயலலிதா. நடந்து முடிந்த லோக்சபாத் தேர்தலில் தமிழகத்தின் 39 நாடாளுமன்றத் தொகுதிகளில் 37 தொகுதிகளை ஜெயலலிதாவின் அ.தி.மு.க கட்சிக்கு தமிழக மக்கள் ‘தாரைவார்த்து’க் கொடுத்து ‘சாதனை’ புரிந்திருக்கிறார்கள். ஆனால் தமிழக மக்களின் உள்ளங்களைக் கவர்ந்த முடிசூடா ராணியை நோக்கி “ஊழல்ராணி” என்ற கண்டனக் கணையும் எய்யப்பட்டிருக்கிறது.



வருவாயை மிஞ்சி சொத்துச் சேர்த்தார் என்ற குற்றச்சாட்டில் ஜெயலலிதா மீதான வழக்கு ஒன்று கடந்த 18 வருடங்களாக நடந்து வருகிறது. ஜெயலலிதா தரப்பின் பலத்த இழுத்தடிப்புகளுக்குப் பின்னர் இந்த வழக்கின் தீர்ப்பு இவ்வருடம் செப்ரெம்பர் மாதம் 20 வழங்கப்படவுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (அதிலும் என்னென்ன இழுத்தடிப்புகள் வருமோ?)

இந்த வழக்கு சம்பந்தமாக ‘ஆனந்தவிகடன்’ வார இதழ் இவ்வாறு எழுதுகிறது:

“இந்த வழக்கு பதிவான பிறகு, இந்திய நாடாளுமன்றம் ஐந்து தேர்தல்களைக் கடந்துவிட்டது. தமிழ்நாடு சட்டமன்றம் மூன்று தேர்தல்களைச் சந்தித்துவிட்டது. உச்ச நீதிமன்றத்துக்கு 12 தலைமை நீதிபதிகள் வந்து போய்விட்டார்கள். சென்னை உயர் நீதிமன்றத்துக்கு 12 தலைமை நீதிபதிகள் வந்து போய்விட்டார்கள். 49 வயதில் இருந்த ஜெயலலிதா பொன் விழா கடந்து, மணி விழா கடந்து ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன. பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்துக்கே நான்கு நீதிபதிகள் மாறிவிட்டார்கள். அரசு வழக்கறிஞரும் மாறிவிட்டார். வழக்கின் விசாரணை அதிகாரிகள் ஓய்வுபெற்று விட்டார்கள். ஆனாலும் வழக்கு நகர்ந்து கொண்டே, நகர்ந்து கொண்டே போகிறது.

முதல்முறை ஆட்சிக்கு வந்தபோது, அதாவது 1991 – ம் ஆண்டு கணக்குப்படி ஜெயலலிதாவின் சொத்து 2 கோடியே 1 லட்சத்து 83 ஆயிரத்து 957 ரூபாய். 1996 – ம் ஆண்டு அவரது பதவிக்காலம் முடிந்த போது அவருடைய சொத்து மதிப்பு, 66 கோடியே 65 லட்சத்து 20 ஆயிரத்து 395 ரூபாய். மாதம் ஒரு ரூபாய் ஊதியம் வாங்கிய ஜெயலலிதா, 66 கோடிக்கும் மேலான சொத்தை எப்படி வாங்க முடியும்? இந்த ஒற்றைக் கேள்விக்குப் பதில் தேடித்தான் 17 ஆண்டுகளாக வழக்கு நடக்கிறது.

1996 – ம் ஆண்டுச் சட்டமன்றத் தேர்தலில் 234 தொகுதிகளில் 4 தொகுதிகளில் மட்டுமே அ.தி.மு.கவினர் வெற்றிபெற முடிந்தது. ஜெயலலிதாவே தோற்றுப்போனார். தோல்விக்கு நான்கு மாதங்கள் கழித்து, “எனக்கு நெருக்கமாக இருந்த சிலருக்குத் தொடர்புடையவர்கள் எனக்குத் தெரியாமலேயே அதிகார மையங்களை ஏற்படுத்திக் கொண்டதால், கட்சியின் பெயர் கெட்டுவிட்டது” என்று சொன்னார்…. அவரோடு நீதிமன்றப் படி ஏறிக்கொண்டு இருக்கும் சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் தான் அந்த அதிகார மையங்கள்.

இவர்களின் பொருளாதார நிலை ஒப்பிட முடியாத அளவுக்கு உயர்ந்துள்ளது. தமிழக முதல்வராக ஜெயலலிதா இருந்தபோது, ஐந்து ஆண்டு காலத்தில் முதல் 27 மாதங்களுக்கு மட்டுமே ஒரு ரூபாய் வீதம் 27 ரூபாய் ஊதியம் பெற்றுள்ளார். ஆனால் 14 கோடி ரூபாய் மதிப்புள்ள கட்டிடங்களைக் கட்டியுள்ளார். அவரது வீட்டில் சோதனை நடத்திய போது 90 லட்சம் மதிப்புள்ள 23 கிலோ தங்கம், ஆபரணங்கள், கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தக் காலகட்டத்தில் அவரது தரப்பினர் 32 கம்பனிகளைப் புதிதாகத் தொடங்கி உள்ளார்கள்” என்று சொன்ன பவானிசிங், “66 கோடி என்பது அன்றைய மதிப்பு. ஆனால், இதன் இன்றைய மதிப்பு 2,847 கோடி ரூபாய்” என்றும் சொல்லி மலைக்க வைத்துள்ளார்.”

இவ்வாறு ‘ஆனந்தவிகடன்’ தனது நீண்ட கட்டுரையில் தெரிவிக்கிறது. (மேலே உள்ளவை கட்டுரையின் ஒரு பகுதிதான்)

தமிழகத்தின் முதல்வர்களாக மாறி மாறி இருந்த ஜெயலலிதாவும், கருணாநிதியும் எப்படி வருமானத்துக்கு அதிகமாகச்


படிப்பகம்

www.padippakam.com

சொத்துச் சேர்த்து வைத்துள்ளார்கள் என்பதை நாடே அறியும். கருணாநிதிக்கு எதிராகவும் முன்னர் பல ஊழல், மோசடி வழக்குகள் நடைபெற்றிருந்தன. இருந்தும் கருணாநிதியின் குடும்பம் இன்று ஆசியாவின் முதல் 10 பணக்காரக் குடும்பங்களில் ஒன்று எனக் கூறப்படுகின்றது. இருந்தும் தமிழக மக்கள் ஒப்பீட்டு வகையில் வேறு நல்ல கட்சிகள் இருந்தும், ஜெயலலிதா, கருணாநிதி ஆகியோரின் கட்சிகளையே மாறி மாறி அரியாசனம் ஏற்றி வருகின்றனர்.

ஒரு சாதாரண பொதுமகன் வறுமையின் நிமித்தம் ஒரு 10 ரூபா களவாடினால் விரைந்து செயற்பட்டு அவனுக்குத் தண்டனை வழங்கும் இந்தியாவின் நீதித்துறை, ஜெயலலிதா போன்ற அதிகாரத்திலிருக்கும் ஒருவரின் வழக்கில் விரைந்து தீர்ப்பு வழங்காமல் 18 வருடங்கள் இழுத்தடிப்பது என்பது, இந்திய நீதித்துறையிலுள்ள அடிப்படைக் குறைபாட்டையே எடுத்துக் காட்டுகிறது.

இந்திய நீதித்துறை சம்பந்தமாக ஒருமுறை கருத்துத் தெரிவித்த, இந்திய நீதித்துறை வரலாற்றில் அசைக்க முடியாத பல தீர்ப்புகளை வழங்கிய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி பி.என்.பகவதி பின்வருமாறு சொன்னார்:

"நம் நாட்டு நீதித்துறை அமைப்பு அநேகமாக இடிந்து விழப்போகிற நிலையில் இருக்கிறது எனக் கூற வேண்டி இருப்பதற்கு வேதனைப்படுகின்றேன். நிலுவையிலுள்ள வழக்குகளின் கனத்தால் நமது நீதித்துறை அமைப்பு நொறுங்கிக் கொண்டிருக்கிறது. நேர்மையற்றவர்கள் மட்டும்தான் நீதிமன்றத் தாமதங்களால் நன்மையடைகின்றனர். தண்டனையில் இருந்து விலக்குப் பெற்றவர்களாக ஆண்டுக் கணக்கில் தம் கடமை தவறி, சட்டபூர்வப் பணிகளைச் செய்யாமலே நாள்களைக் கடத்தி விடுகிறார்கள். வசதியுள்ள ஒவ்வொரு நபரும் அரசுக்கு எதிராக அல்லது பொது நிர்வாகத்துக்கு எதிராக ஆணைகளும், அல்லது தடை அல்லது நிறுத்த ஆணை என்று ஏதோ ஒன்றைப் பெற்றுக்கொண்டு அதன் பலனை ஆண்டுக் கணக்கில் அனுபவித்துக் கொள்கிறார்கள். இதெல்லாம் பெரும்பாலும் பொதுநன்மைக்குக் கேடு விளைவித்துத்தான் செய்யப்படுகின்றன".

## காமராஜரின் முன்னுதாரண வாழ்க்கை!

இதேவேளை, இந்தியாவின் மிகப்பெரும் முதலாளித்துவக் கட்சியாகவும், கூடுதலான ஆண்டுகளாக இந்தியாவை ஆட்சி புரிந்த கட்சியாகவும் உள்ள இந்திய தேசிய காங்கிரசின் தலைவராக தமிழகத்தைச் சேர்ந்த ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவரும், மிகப்பெரிய பள்ளிப்படிப்பு ஏதுமல்லாத காமராஜர் இருந்திருக்கிறார். அவர் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த காலத்தில்தான், தமிழகத்தின் ஏழை எளிய மக்களுக்கு ஒருசில நன்மைகளாவது கிட்டியது.

அவரது எளிமையானதும் நேர்மையானதுமான வாழ்வு இன்றும் அரசியல்வாதிகளுக்கு முன்மாதியாகக் கூறப்படுகிறது. அவர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது, அவரது தாயாரான சிவகாமி அம்மையார் 1961ஆம் ஆண்டு தமிழகத்தின் பிரபல வாரப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியைக் கீழே தந்துள்ளோம். அதையும் படித்து தமிழகத்தின் இன்றைய முதல்வராக இருக்கும் ஜெயலலிதா, முன்னைய முதல்வராக இருந்த கருணாநிதி ஆகியோரின் வாழ்க்கையுடன் ஒப்பீட்டுப் பாருங்கள்.

**பேட்டி வருமாறு:**

"சென்னைக்குப் போய் மகனோட இருப்பதில்லையா... என்று கேட்ட போது, அம்மூதாட்டியார் முறுவலித்தார்..."

"நல்லா சொன்னீங்கய்யா...அவன் மந்திரியாகி (முதல்வர்) ஏழெட்டு வருசமாகுது. இதுவரைக்கும் நானங்கே அஞ்சு தடவைதான் போயிருப்பேன்..."

"போனால் ஒருமாதம் இரண்டு மாதம் தங்கிவிட்டு வருவீர்களா...?"

"நல்லா சொன்னீங்கய்யா...தங்கறாவது. போன உடனே, என்னை ஊருக்கு திரும்ப பயணம் பண்ணி அனுப்புவதிலேயே குறியாக இருப்பானே! பட்டணம் பார்க்கணும்னா சுத்திப்பாரு. திருப்பதிக்குப் போகணும்னா போயிட்டு வா...எல்லாத்தையும் பாத்திட்டு உடனே விருதுநகருக்குப் போய்ச் சேரும்பானே...!

"இந்த வீட்டுக்கு வந்து உங்களைப் பார்ப்பாரா?"

"உம்...ஆறுமாசத்துக்கு ஒருக்கா வருவான். இப்படி வாசப்படி ஏறி உள்ளே வருவான். சவுக்கியமா? என்று கேட்பான். இப்படியே திரும்பி, அப்படியே போயிடுவான். அவனுக்கு ஏது நேரம்?"

"மாசச் செலவுக்கு உங்களுக்குப் பணம் அனுப்புகிறாரா?"

"அனுப்பறான். பொட்டிக்கடை தனக்கோடி நாடார் மூலமாத்தான் பணம் வரும்..."

"எவ்வளவு பணம் அனுப்பறாரு...?"

"120 ரூபாய்....பத்துமாய்யா? தண்ணி வரியே 13 ரூபா கட்டறேன். எனக்கு ஒரு மகள். அவள் புருசன் இறந்து போயிட்டாரு. அவளுக்கு இரண்டு ஆம்பிளைப் பிள்ளைங்க. ஒருத்தன் வேலைவெட்டி இல்லாம இருக்கான். தங்கச்சி குடும்பம், குழந்தைங்கன்னு கவனிக்கமாட்டான். தங்கச்சி மகன்தானே...ஒரு வேலை செஞ்சு வைப்பானா... செய்ய மாட்டான்யா...மாசம் அந்த 120 ரூபாதான் கொடுப்பான். அதுக்குமேல செலவு செய்யக் கூடாதும்பான், அவங்கவங்க உழைச்சுப் பிழைக்கணும்பான்.... நானும் பேசாம இருந்துடுவேன். அவன் சொல்றதும் நியாயம்தானேய்யா...ரேசன் வந்தது பாருங்க. அப்ப இங்க வந்திருக்கான். அவனைக்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க..


படிப்பகம்

www.padippakam.com

# ஹமாஸ் இயக்கத்துக்கும் புலிகளுக்கும் இடையிலான அடிப்படை வித்தியாசம்!



யூன் மாதம் ஆரம்பித்து 50 நாட்கள் வரை பலஸ்தீனம் மீது இஸ்ரேல் நடாத்திய காட்டுமிராண்டித்தனமான விமான, தரைவழித் தாக்குதல்களின் போது, 2,100இற்கும் அதிகமான பலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் படுகாயம் அடைந்தனர். இஸ்ரேல் ஐ.நா நிர்வகிக்கும் பாதுகாப்பிடங்களில் அடைக்கலம் தேடியிருந்தோரைக் கூட விட்டு வைக்கவில்லை. இஸ்ரேல் தரப்பில் 66 இராணுவ வீரர்கள் மட்டுமே இறந்துள்ளனர்!

இந்த இராணுவ நடவடிக்கைகளின் போது, பலஸ்தீனத்தின் காஸா பகுதியில் 5,226 இலக்குகளைத் தாம் தாக்கியதாக இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது. அதேநேரம் காஸா பகுதியை நிர்வகித்து வரும் ஹமாஸ் இயக்கம் இஸ்ரேல் மீது 4,591 ரொக்கட் மற்றும் மோட்டார் குண்டுகளை ஏவியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் நடைபெற்ற இறுதிக்கட்டப் போரில் இருதரப்பாலும் கொல்லப்பட்ட பொதுமக்களின் (பல்லாயிரக்கணக்கான) தொகையைப் பார்க்கும் போது, காஸாவிலும் இஸ்ரேலிலும் நடாத்தப்பட்ட பல்லாயிரக் கணக்கான தாக்குதல்களில் இறந்தவர்களின் தொகை ஆச்சரியத்தை உண்டுபண்ணும் அளவுக்குக் குறைவாக உள்ளதை அவதானிக்கலாம். ஏன் இலங்கைப் போரில் இவ்வளவு அழிவும், பலஸ்தீனத்தில் இஸ்ரேல் நடாத்திய தாக்குதலில் இவ்வளவு குறைவான அளவு உயிரிழப்புகளும் எற்பட்டன என பலருக்கு வியப்பாகவும் இருக்கலாம். அதுவும் இலங்கையுடன் ஒப்பிடுகையில் இஸ்ரேலிடம் உள்ள படை பலமும், நவீன ஆயுதங்களின் தரமும் பல மடங்கு உயர்வானவை.

இலங்கை இறுதிக்கட்டப் போரில் 40,000 வரையிலான பொதுமக்கள் இறந்ததாக ஐ.நா தெரிவித்துள்ளது. அதேநேரத்தில் புலிகளின் அமைப்புகளும், தமிழ்நாட்டின் பழ.நெடுமாறன், வை.கோ போன்ற வகையறாக்களும் இறுதிக்கட்டப் போரில் ஒன்றரை இலட்சம், இரண்டு இலட்சம் வரையிலான தமிழர்கள் ராஜபக்ஸ அரசால் இனப்படுகொலை செய்யப்பட்டதாக தமது மன விருப்பத்துக்கு ஏற்றவாறு சொல்லி வருகின்றனர்.

**கா. முருகேசன்**

ஐ.நாவின் கணக்குகள் உள்பட இந்த கணக்குகள் எவ்வளவு தூரம் சரியானவை என்று யாரும் சொல்ல முடியாது. ஏனெனில் இதுவரை இலங்கை அரசோ, சர்வதேச நிறுவனங்களோ அல்லது பக்கச்சார்பற்ற எந்தவொரு அமைப்போ இறுதிக்கட்டப் போரில் இறந்தவர்கள் பற்றிய முழுமையான ஆய்வு எதையும் செய்யவில்லை. இருப்பினும் பொதுமக்கள் மத்தியில் இருந்து கிடைக்கும் தகவல்களின்படி இறுதி யுத்தத்தில் பல ஆயிரம் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது.

ஆனால் நிச்சயமாக பலஸ்தீனத்தில் இஸ்ரேல் மேற்கொண்ட ஆயிரக்கணக்கான தாக்குதல்கள் அளவுக்கு வன்னியில் அரச படைகளோ புலிகளோ தாக்குதல்கள் மேற்கொண்டிருப்பார்கள் என்றும் சொல்வதற்கில்லை. அப்படியிருக்க பலஸ்தீனத்தில் ஏற்பட்டிராத அளவுக்கு இலங்கை இறுதி யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கானவர்கள் கொல்லப்படக் காரணம் என்ன என்ற கேள்வி எழுகின்றது. பலஸ்தீனத்தில் இஸ்ரேலின் தாக்குதல்களால் பல்லாயிரக்கணக்கான மக்கள் இறந்து போகாமல் ஹமாஸ் இயக்கத்தால் மக்களை எப்படிப் பாதுகாக்க முடிந்தது?

இங்குதான் ஹமாஸ் இயக்கத்துக்கும், புலிகளுக்கும் இடையில் இருக்கின்ற அடிப்படையான ஒரு குணாம்ச வித்தியாசம் தெரிய வருகிறது.

மகிந்த ராஜபக்ஸ ஆட்சிக்கு வந்ததும் புலிகளுடனான சமாதானப் பேச்சுகளுக்கு அழைப்பு விடுத்தார். அவரது


படிப்பகம்

www.padippakam.com

அழைப்பை அரசின் பலவீனமாகக் கருதிய புலிகள் வடக்கிலும் கிழக்கிலும் இருந்த இராணுவக் காவலரண்கள் மீது தொடர்ச்சியான தாக்குதல்களை நடாத்த ஆரம்பித்தனர். போதாதிற்கு மாவிலாறு அணையை மூடி விவசாயிகளுக்குத் தண்ணீர் கிடைக்காமலும் செய்தனர். அதைத் தொடர்ந்து மகிந்த அரசு புலிகளுக்கு எதிராக தொடர்ச்சியான தாக்குதலை ஆரம்பித்தது.

இந்த முறை புலிகளின் தந்திரோபாயங்கள் எதுவும் அரசிடம் பலிக்கவில்லை அரசு புலிகள் மீது தொடர்ச்சியாகத் தாக்குதல்களை நடாத்தி அவர்களை முற்றுமுழுதாக நிர்மூலம் செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தது.

புலிகள் முதலில் கிழக்கு மாகாணத்தில் இருந்து பின்வாங்கினார்கள். பின்னர் வவுனியா, மன்னார், கிளிநொச்சி என ஒவ்வொரு இடத்திலிருந்தும் பின்வாங்கத் தொடங்கினார்கள். இந்த இடங்களில் இடம்பெற்ற மோதல்களின் போது புலிகள் முள்ளிவாய்க்காலில் செய்தது போல தமக்குப் பாதுகாப்பாகப் பொதுமக்களைப் பிடித்து வைத்திருக்கவில்லை. அதனால் இராணுவம் பொதுமக்களுக்கு அதிக இழப்புகள் எதுவுமின்றி அந்த இடங்களை விடுவித்தது.

ஆனால் கிளிநொச்சியில் இருந்தும் புலிகள் பின்வாங்கிய பின்னர் புலிகளுக்கு வேறு போக்கிடம் எதுவும் இருக்கவில்லை. அதனால் பிரபாகரன் உட்பட புலிகளின் தலைமை முள்ளிவாய்க்கால் என்ற குறுகிய நிலப்பரப்புக்குள் புகலிடம் தேடியதுடன், அங்கு பாதுகாப்புக்காக ஒதுங்கிய மூன்று இலட்சம் பொதுமக்களையும் தமக்குப் பாதுகாப்புக் கேடயமாகப் பிடித்து வைத்துக் கொண்டனர்.

புலிகள் அவ்வாறு பொதுமக்களைப் பாதுகாப்புக் கேடயமாகப் பிடித்து வைத்தருந்ததிற்குப் பல காரணங்கள் இருந்தன. பொதுமக்கள் மத்தியில் பதுங்கி இருக்கும் தம்மீது அரசாங்கப் படைகள் தாக்குதல் நடாத்தப் புறப்பட்டால், அதனால் தமக்கு பாதுகாப்பு வேலியாக இருக்கும் பல்லாயிரக் கணக்கான மக்கள் மடிய வேண்டி வரும் என்பதால், அரசாங்கம் தம்மீது தாக்குதல் நடாத்தும் எண்ணத்தைக் கைவிட்டுவிடும் என அவர்கள் நம்பினார்கள்.

அத்துடன் இப்படியான ஒரு நெருக்கடியான சூழலில் ஐ.நாவோ அல்லது வெளிநாடுகள் சிலவோ தலையிட்டு இராணுவத்தைப் பின்வாங்க வைக்கக்கூடும் எனவும் நம்பினர். (சில பலம்வாய்ந்த நாடுகள் கப்பல்களை அனுப்பி பிரபாகரனையும் இதர புலித் தலைவர்களையும் பாதுகாப்பாக வெளியேற்றும் என அவர்களுக்கு நம்பிக்கை அளிக்கப் பட்டிருந்ததாகவும் கூறப்படுகின்றது)

ஆனால் புலிகளின் எதிர்பார்ப்புகளை தவிடுபொடியாக்கி விட்டு, அரச படைகள் புலிகள் மீது தமது இறுதித் தாக்குதலை மேற்கொண்டனர். அதுமாத்திரமின்றி, புலிகள் மீதான இறுதித் தாக்குதலை வெற்றிகரமாக நடாத்தி அவர்களை முற்றுமுழதாக அழித்தொழிக்க வேண்டுமென்பதில் இந்தியா உட்பட சில மேற்கு நாடுகளும் அரசாங்கத்தின் பக்கம் திடமாக இருந்ததால்தான், அவர்களை காப்பாற்றுவதற்கு எவரும் முயற்சிக்கவில்லை என்ற கருத்தும் நிலவுகின்றது.

எதுஎப்படியிருந்த போதிலும், புலிகள் செய்த வேலையால், அதாவது பொதுமக்களைத் தமது பாதுகாப்புக்காகப் பிடித்து வைத்திருந்ததால், அநியாயமாக ஆயிரக்கணக்கான மக்கள் மடிய வேண்டிய நிலையை அவர்கள்தான் உருவாக்கினார்கள் என்பதுதான் உண்மை. போதாதிற்கு தம்மிடம் இருந்து தப்பியோடிய பொதுமக்களைப் புலிகளும் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள் என்பதற்கும் ஆதாரங்கள் இருக்கின்றன. அதாவது ஒரு விடுதலை இயக்கம் எனத் தம்மை அழைத்துக்கொண்ட புலிகள், பொதுமக்களின் பாதுகாப்பை விடத் தமது பாதுகாப்பு மேலானது என்ற எண்ணத்தில் அவர்களைப் பாதுகாப்புக் கேடயமாக வைத்திருந்தது மட்டுமின்றி, அவர்களைச் சுட்டும் கொலை செய்து மிகப்பெரிய மனித உரிமை மீறலிலும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

மாறாக, பலஸ்தீனத்தில் இஸ்ரேல் கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடாத்திய வேளையில் ஹமாஸ் இயக்கம் எங்குமே பலஸ்தீன மக்களைத் தனக்குப் பாதுகாப்புக் கேடயமாகப் பிடித்து வைத்திருக்கவில்லை. அதனால்தான் ஹமாஸ் இயக்க இலக்குகளை இஸ்ரேலிய இராணுவம் குறிவைத்துத் தாக்கிய போது, பல்லாயிரக்கணக்கான பலஸ்தீன மக்கள் உயிரிழப்பிலிருந்து தப்ப முடிந்தது. இதுவே ஹமாஸ் இயக்கத்துக்கும் புலிகளுக்கும் இடையில் இருக்கின்ற அடிப்படை வித்தியாசம்.

இதுதவிர இன்னொரு வித்தியாசமும் ஹமாஸ் இயக்கத்துக்கும் புலிகளுக்குமிடையில் இருக்கின்றது. இரண்டு இயக்கங்களுமே பயங்கரவாத இயக்கங்களாக பல நாடுகளால், குறிப்பாக மேற்கு நாடுகளால் தடை செய்யப்பட்ட இயக்கங்களாகும். இரண்டு இயக்கங்களும் ஆயுத வன்முறைப் பாதையில் பயணித்திருந்தாலும், ஹமாஸ் பலஸ்தீனத்தின் காஸா பகுதியில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று அங்கு அரசாங்கம் ஒன்றை நடாத்தி வரும் மக்கள் அபிமானம் பெற்ற இயக்கமாகும். ஆனால் புலிகள் ஒருபோதுமே தேர்தல் எதிலும் நின்று மக்கள் மத்தியில் தமக்குள்ள ஆதரவைப் பரீட்சித்துப் பார்த்தவர்கள் அல்ல.

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க..


படிப்பகம்

www.padippakam.com

# கனடாவிலிருந்து ஆண்டு தோறும் 10,000 பேருக்கு மேற்பட்டோர் நாடு கடத்தப்படுகின்றனர்!

கனடா ஆண்டுதோறும் 10,000 பேருக்கு மேற்பட்டோரை நாடு கடத்துவதாக அண்மையில் தகவல்கள் வெளியாகியுள்ளன. அப்படி நாடுகடத்தப்படும் நாடுகளில் சில மோசமான மனித உரிமை மீறல் வரலாற்றைக் கொண்டவை எனவும் தெரிய வந்துள்ளது.

அவ்வாறு நாடு கடத்தப்படுவோரில் பெரும்பான்மையானவர்கள் அகதி அந்தஸ்து மறுக்கப்பட்டவர்களாவர். அவர்களில் பெரும்பாலானோர் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளுக்கே நாடு கடத்தப்படுகின்றனர். அதேநேரத்தில் யுத்தம் நடைபெறும் நாடுகளான ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளுக்கும், அடக்குமுறை ஆட்சிகள் நடைபெறுவதாக மேற்குலகால் குறிப்பிடப்படும் வட கொரியா, எரித்திரியா போன்ற நாடுகளுக்கும் கூட, ஆட்கள் நாடு கடத்தப்படுவதாக தெரிய வருகின்றது.

கனடிய எல்லைச் சேவைகள் முகவரகம் (Canada Border Services Agency) அண்மையில் வெளியிட்ட தகவல்களிலேயே இந்த விபரங்கள் தெரிய வந்துள்ளது.

இந்த எல்லைச் சேவைகள் முகவரகத்தின் அந்தரங்கம் பேணும் விதிகளின்படி, தனிநபர்களின் நாடு கடத்தல் விபரங்கள் வெளியிடப்படுவதில்லை. அதனால் பெரும்பாலான கனடியர்கள் ஊடகங்களில் எப்போதாவது வெளிவரும் தகவல்கள் ஊடாகவே இவற்றை அறிந்து கொள்கின்றனர்.

தற்போது வெளிவந்துள்ள தகவல்களைப் பார்த்த பின்னர், அகதிகளுக்கு உதவும் குழுவின் ஒருங்கிணைப்பாளரான றிச்சார்ட் கோல்ட்மன் (Richard Goldman, Co-ordinator of the Committee to aid Refugees) கருத்துக் கூறுகையில், "மோசமான மனித உரிமை மீறல்களைக் கொண்ட நாடுகளுக்கு மக்களை நாடு கடத்துவது என்பது, சில வருடங்களுக்கு முன் இருந்ததை விட பாரதூரமானது என நான் எண்ணுகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

கனடிய எல்லைச் சேவைகள் முகவரகம் தயாரித்துள்ள தகவல்களின்படி, 2004 தொடக்கம் முதல் 2014 யூன் முடிவு வரையிலான 10 ஆண்டு காலப்பகுதியில் 148,057 பேர் கனடாவிலிருந்து பல்வேறு நாடுகளுக்கும் நாடு கடத்தப்பட்டுள்ளனர். இவர்களில் 70 வீதமானவர்கள் அகதித் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கட்டவர்களாவர்.

ஆனால் சமீப காலங்களாக பாலஸ்தீனத்தின் காஸா பகுதி, மாலி, சோமாலியாவின் சில பகுதிகள், மத்திய ஆபிரிக்க குடியரசு போன்றவற்றுக்கு நாடு கடத்துவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக எல்லைச் சேவைகள் முகவரகத்தின் பேச்சாளர் பியர்ரே டிவேயு (Pierre Deveau) தெரிவித்துள்ளார்.

**தகவல் ஆதாரம்: Toronto Metro (News Paper)**

# டேவிட் கமரூன் அரசின் இஸ்ரேல் ஆதரவுப் போக்கால் பிரித்தானிய பெண் அமைச்சர் பதவி விலகல்!

பிரித்தானியாவில் பிரதமர் டேவிட் கமரூன் தலைமையிலான கொன்சவேர்டிக் கட்சி அரசின் இஸ்ரேல் ஆதரவுப் போக்குக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அந்த அரசின் வெளிவிவகார காரியாலய அமைச்சரான சயீடா வார்ஸி (Sayeeda Warsi) தமது பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளார். பாகிஸ்தான் வம்சாவழிப் பெண்மணியான இவர் பிரித்தானிய கொன்சவேர்டிக் கட்சியின் முக்கியமான பெண் உறுப்பினர்களில் ஒருவராவார். அத்துடன் இவர் பிரித்தானியாவின் முதல் பெண் முஸ்லீம் அமைச்சர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சமீபத்தில் இஸ்ரேல் பாலஸ்தீனத்தின் காஸா பகுதி மீது மேற்கொண்ட மிகக் கடுமையான இராணுவத் தாக்குதல்களின் போது, அமெரிக்கா, கனடா என்பனவற்றுடன் இணைந்து டேவிட் கமரூனின் பிரித்தானிய அரசாங்கமும் இஸ்ரேலுக்கே தமது பூரண ஆதரவைத் தெரிவித்திருந்தது. அதுமாத்திரமல்லாமல், இந்த நாடுகள் மத்திய கிழக்கில் இஸ்ரேல் ~ பாலஸ்தீனம் என்ற இரு அரசுக் கொள்கையை ஆதரிப்பதாகச் சொல்லிக் கொண்டாலும், நடைமுறையில் பாலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு, தாக்குதல் நடவடிக்கைகளை எப்போதுமே ஆதரித்து வந்துள்ளன.

பதவி விலகிய அமைச்சர், காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதலை பிரித்தானியா ஆதரிப்பதானது, "தார்மீகரீதியாக நியாயப்படுத்த முடியாத" ஒன்றாகும் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில், "எனது பார்வையில் மத்திய கிழக்கு சமாதான முயற்சிகளுக்கு பொதுவாகவும், காஸாவில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள



சயீடா வார்ஸி

நிலைமைகளின் அடிப்படையிலும், பிரித்தானியாவின் நிலைப்பாடு அதன் தேசிய நலன்களுக்கும், அதன் சர்வதேசிய பங்களிப்புக்கும் பாதகமானது" எனவும் குறிப்பிட்டுள்ளார்.

டேவிட் கமரூன் அரசாங்கத்தின் இஸ்ரேல் சார்பு கொள்கை சம்பந்தமாக ஏற்கெனவே எதிர்க்கட்சிகளினதும், அவரது சொந்த கொன்சவேர்டிக் கட்சி உறுப்பினர்களினதும் எதிர்ப்பைச் சம்பாதித்துள்ள கமரூன், இந்த சயீடா வார்ஸி என்ற பெண் அமைச்சரின் பதவி விலகலால் மேலும் நெருக்கடிகளைச் சந்திக்கக்கூடும் என அரசியல் நோக்கர்கள் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளனர். *


படிப்பகம்

www.padippakam.com

முன்பக்கத்தொடர்ச்சி...

எனவே இந்த விடயத்தில் இவர்கள் எல்லோருமே ஒரு நேர்கோட்டில் வருகின்றனர்.

எனவே இன்றைய இந்திய அரசுக்கு மேற்கத்தைய சக்திகளால் இலங்கைத் தமிழர் பிரச்சினையைப் பயன்படுத்தி இந்தியாவுக்கு தொல்லை தரலாம் என்ற பயம் கிஞ்சித்தும் இல்லை. ஆனால் இலங்கை அரசாங்கத்தின் மேற்கத்தைய விரோதப் போக்கால் அந்த சக்திகள் இலங்கையில் அளவுக்கதிகமான தலையீடுகளை மேற்கொள்ளும் போது, அதனால் இரண்டு விதமான ஆபத்துகள் இந்தியாவுக்கு வரலாம் என இந்திய அரசு அஞ்சுகிறது.

அதில் ஒன்று, இலங்கையில் மேற்கு நாடுகளை தன்னிச்சையாகத் தலையிட விட்டால், அது காஸ்மீர் போன்ற நீண்டகாலப் பிரச்சினைகளை வைத்திருக்கும் இந்தியாவுக்கும் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்பது. இரண்டாவது, மேற்கத்தைய நாடுகளின் தன்னிச்சையான, ஒரு தலைப்பட்சமான தலையீடுகளை இந்தியா கட்டுப்படுத்தத் தவறினால், அருகில் உள்ள நட்பு நாடால் பயனில்லை என்று கருதிக்கொண்டு இலங்கை அரசு இந்தியாவின் போட்டியாளனான சீனாவின் பக்கம் அதிகமாகச் சாயலாம் என்ற அச்சம் இன்னொன்று.

எனவே, இலங்கைப் பிரச்சினையில் இரண்டு போக்குகளை இந்தியா காண்கிறது. ஒன்று, இலங்கை அரசாங்கம் சீனாவை நோக்கிச் சாய்ந்து செல்லும் போக்கு. மற்றது, இலங்கை தமிழ் தேசியவாதச் சக்திகள் மேற்கத்தைய சக்திகளின் பக்கம் சாய்ந்து செல்லும் போக்கு. இது ஒருவகையில் இன்றைய உலகில் பலம் வாய்ந்த நிலையில் இருக்கும் அமெரிக்காவுக்கும், விரைவில் அமெரிக்காவை முந்திச் செல்லப்போகும் சீனாவுக்கும் இடையில் உலகளாவிய ரிதியில் ஏற்பட்டுள்ள போட்டாபோட்டியின் விளைவுதான் என்ற போதிலும், இதில் இலங்கையில் உள்ள எதிரும் புதிருமான சக்திகளில் ஒன்றாவது இந்தியாவை அனுசரித்துப் போகாத நிலைமை இருப்பதுதான் இந்தியாவின் கவலை. இந்த நிலைமை இப்பொழுதுதான் ஏற்பட்ட நிலைமை அல்ல. முந்தைய காங்கிரஸ் அரசாங்கத்தின் 10 வருட ஆட்சிக் காலத்திலேயே ஏற்பட்டுவிட்ட நிலைமை. அந்த நிலைமையை சீர்செய்வதற்கு நரேந்திர மோடியின் புதிய அரசு முயற்சிப்பதையே அதன் நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன.

இன்னொன்று, இந்தியாவின் பெரும்பாலான மாநிலங்களில் கடந்த தேர்தலின் போது 'மோடி அலை' வீசினாலும், தமிழகத்தைப் பொறுத்தவரை ஊடகங்கள் சிலேடையாக வர்ணிப்பது போல, 'லேடி அலை' (ஜெயலலிதா) தான் வீசியுள்ளது. இந்த நிலைமை மோடிக்கு ஒரு ஏமாற்றம் என்பது போல, தமிழகக் கட்சிகளுக்கும் ஒரு ஏமாற்றம்தான். ஏனெனில் முன்னைய மன்மோகன் அரசுக்கு தி.மு.க செய்தது போல, இம்முறை மோடி அரசை ஆட்டிப் படைக்க முடியாத அளவுக்கு மோடி அரசு ஏகப் பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்துள்ளது.

இந்த நிலைமை மோடியை சற்றுக் கவலைக்குள்ளாக்கியுள்ளது. அதிகாரத்தில் பங்கு பெறாதவர்கள் அரசுக்கு எதிராக ஏதாவது எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவர் என்பது இயல்பு. அந்த வகையில் ஏற்கெனவே தமிழக கட்சிகள் மன்மோகன்சிங் அரசுக்கு எதிராகப் பிரயோகித்த 'ஈழத்தமிழர் பிரச்சினை' என்ற கதாயுதம் மோடி அரசுக்கு எதிராகவும் பயன்படுத்தப்படுவதற்கு தயார் நிலையில் இருக்கிறது என்பது மோடிக்கு நன்கு தெரியும். எனவே ஏதாவது ஒரு வழியில் அதைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவையும் மோடிக்கு உண்டு.

அதனால்தான் தனது பதவி ஏற்பு விழாவுக்கு இலங்கை ஜனாதிபதியை அழைக்கக்கூடாது என தமிழகத்தின் அனைத்துக் கட்சிகளும் கோரிய போதும், அதைப் புறந்தள்ளிவிட்டு அவரை அழைத்தது, ராஜீவ் காந்தி கொலை குற்றவாளிகளின் விடயத்திலும், தமிழக மீனவர் பிரச்சினையிலும், முன்னைய காங்கிரஸ் அரசாங்கத்தின் அதே அணுகுமுறையைப் பின்பற்றுவது, இலங்கையில் நடந்த பாதுகாப்பு கருத்தரங்கில் கலந்துகொள்ள உயர்மட்ட தூதுக்குழுவை அனுப்பியது, இலங்கையின் போர்க்குற்ற விசாரணைக்கு வர இருந்த ஐ.நா. பிரதிநிதிகளுக்கு விசா வழங்க மறுத்தது போன்ற பல விடயங்களை மோடியின் அரசு செய்தது.

அதேநேரத்தில் இலங்கை அரசுக்கு விருப்பமில்லாத விடயம் என்று தெரிந்தும், தமிழ் தேசியக் கூட்டமைப்பை இந்தியாவுக்கு அழைத்து பிரதமர், வெளிவிவகார அமைச்சர் போன்றவர்கள் கலந்துரையாடியதும், அதே அளவு முக்கியத்துவமுடைய விடயங்களாகும்.

அதாவது முன்னைய காங்கிரஸ் ஆட்சியின் போது இலங்கை அரசாங்கத்தின் மீதும், இலங்கைத் தமிழர் மீதும் இழந்து போயிருந்த கடிவாளத்தை மீண்டும் எடுத்துக் கொள்வதற்கு மோடியின் அரசு தீர்மானித்துள்ளதின் சமிக்ஞைகளே இந்த நடவடிக்கைகள்.

அதனால்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தூதுக்குழுவினரிடம் பிரதமர் நரேந்திர மோடி தெளிவாகச் சில விடயங்களைத் தெரிவித்திருக்கிறார். அதாவது,

ஒன்றுபட்ட இலங்கைக்குள்தான் இலங்கைத் தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு. அது 13ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும். (அதாவது முன்னைய காங்கிரஸ் அரசின் அதே நிலைப்பாடு)

- தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஏனைய சிறுபான்மை இனங்களான முஸ்லீம்களையும், மலையகத் தமிழர்களையும், அரவணைத்துக் கொண்டு போக வேண்டும். (அதாவது யாழ்.மையவாத செயற்பாடுகளைக் கைவிட வேண்டும் என இதை அர்த்தப்படுத்தலாம்)

- தாம் பயங்கரவாத இயக்கம் இல்லை என்பதை இந்தியாவுக்கும், உலக நாடுகளுக்கும் எடுத்துக் காட்ட வேண்டும். (தமிழ் தேசியக் கூட்டமைப்பு புலிகளால் உருவாக்கப்பட்டதென்பதையும், அது புலிகள்தான் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று சொன்னதையும் மனதில் வைத்து இதைச் சொல்லியிருக்கலாம்)

- இனப்பிரச்சினைக்கான தீர்வு சம்பந்தமான விடயத்தை தம்மிடம் (மோடியிடம்) விட்டுவிட வேண்டும். (இது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கடந்த கால அர்த்தமற்ற செயற்பாடுகளின் தன்மையை மறைமுகமாக விமர்சிப்பதாக இருப்பதுடன், இலங்கைத் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக இனிமேல் கூட்டமைப்பு அல்ல, நானே உங்களுடன் பேசுவேன் என ராஜபக்ஸ அரசாங்கத்துக்கு உணர்த்தும் விடயமுமாகும்)

கூட்டமைப்பினருக்கு மோடி வழங்கிய அறிவுரைகள் நிச்சயமாக கூட்டமைப்பினருக்கு மட்டுமின்றி, அவர்களது புலம்பெயர் புலி ஆதரவாளர்கள், தமிழக பிழைப்புவாத தமிழ் கட்சிகள் என்பனவுக்கும் கசப்பான மருந்து என்பதில் சந்தேகம் இல்லை. அதேநேரத்தில்

www.padippakam.com

ராஜபக்ஸ அரசாங்கத்துக்கும் இது கசப்பான மருந்துதான்.

இரு தரப்பினரும், அதாவது தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும், இலங்கை அரசாங்கமும், புதிய இந்தியப் பிரதமரின் அறிவுரைகளை கவனத்தில் எடுத்து சிரத்தையுடன் செயற்படுவார்களா அல்லது பழையபடி 'சுற்றிச் சுற்றி சுப்பற்றை கொல்லைக்குள்தானா?' என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். *

10ம் பக்கத்தொடர்ச்சி...

கேட்டேன், 'என்னப்பா, இருந்த வீட்டிலயும் கேப்பை சாப்பிட்டதில்லை. இப்ப இப்படி கேப்பையையும் கம்பும் போடறாங்களே...இதை எப்படிச் சாப்பிடறது...நெல்லு வாங்கித் தரப்படாதா?'ன்னு கேட்டேன். 'நெல்லுப் பேச்சு பேசாதே...ஊருக்கெல்லாம் ஒண்ணு, நமக்கு ஒண்ணா...'ன்னு கேட்டான். அவன் சொல்றதும் நியாயம்தானேய்யா..."

இன்னும் 100 வருடங்கள் போனாலும் காமராஜரின் இந்த முன்னுதாரண வாழ்க்கையை எந்தவொரு தமிழக அரசியல் தலைவரும் பின்பற்றுவார் என்பதற்கு உத்தரவாதம் இல்லை. *

7ம் பக்கத்தொடர்ச்சி...

ஈராக்கில் பேரழிவை உண்டுபண்ணும் ஆயுதங்களைக் கண்காணித்த அமைப்பாகும். எங்களுக்குத் தெரிந்தவரை, அங்கே அவ்வாறான எதுவும் இல்லை. இது ஒரு தவறல்ல. இது ஒரு பொய்'' எனவும் மூரே குறிப்பிட்டார்.

முன்னதாக, ஸ்கொட்லாந்தின் சுதந்திரம் உலகில் ஒரு ''பிரளய'' தாக்கத்தை உண்டுபண்ணும் என நேட்டோவின் (Nato) முன்னாள் செயலாளர் நாயகம் ஜோர்ச் ரொபேர்ட்சன் பிரபு (Lord George Robertson) எச்சரித்திருந்தார்.

முன்னாள் பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினரான ரொபேர்ட்சன் அமெரிக்காவில் ஒரு கூட்டத்தில் பேசும்போது, ''பிரித்தானியாவின் உடைவு எமது போட்டியாளர்களிடமும், எதிரிகளிடமும் பலத்த ஆரவாரத்தை உருவாக்கும். மேற்கின் இரண்டாவது இராணுவ சக்தி இந்த வருடம் சுக்குநூறாகிப் போவது பூகோள அரசியல் முறைகளில் பிரளயத்தை உண்டாக்கும்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

செப்ரெம்பர் 18ஆம் திகதி ஸ்கொட்லாந்து வாக்காளர்களிடம் கேட்கப்படும் ஒரே கேள்வி என்னவென்றால், ''ஸ்கொட்லாந்து ஒரு சுதந்திர நாடாகுவதை ஆதரிக்கிறீர்களா?'' என்பதாகும்.

**நன்றி: Global Research**
**தமிழில்: தவம்**

12ம் பக்கத்தொடர்ச்சி...

மாறாகத் தமது தடையை மீறி கொடிகாமத்துக்கு சென்று வாக்களித்துவிட்டு வந்த வன்னித் தமிழ் மகன் ஒருவரின் வாக்களித்த கையைத் துண்டித்து ஜனநாயத்துக்கு எதிரான தமது பயங்கரவாத நிலைப்பாட்டையும் செயல்பாட்டையும் வெளிக்காட்டியவர்கள்!

இறுதியில் தம்மைப் பாதுகாப்பதற்காக பொதுமக்களைப் பலிகடாக்களாக்க முயன்ற புலிகள், முடிவில் பொதுமக்களையும் அழித்து, தம்மையும் அழித்துக் கொண்ட பயங்கரவாத இயக்கமொன்றின் வரலாற்றுக்கு உதாரணமாகிப் போனார்கள்.

குறிப்பு: ஏனைய தமிழ் ஆயுதப் போராட்ட இயக்கங்கள் எல்லாம் ஆரம்ப காலங்களில் ஏகாதிபத்தியத்துக்கும் இஸ்ரேலுக்கும் எதிரான பலஸ்தீன விடுதலை இயக்கத்திடம் (PLO) ஆயுதப் பயிற்சி எடுக்க, புலிகள் மட்டும் இஸ்ரேலின் மொசாட் உளவு அமைப்பிடம் – அதுவும் ஜேஆரின் இலங்கை அரச படைகளுக்கு அருகாக – பயிற்சி எடுத்தார்கள் என்றொரு தகவல் உண்டு. *

''நான் வணங்கும் தெய்வங்கள் மூன்று, முதல் தெய்வம் – அறிவு, இரண்டாவது தெய்வம் – சுயமரியாதை, மூன்றாவது தெய்வம்– நன்னடத்தை''. **–பி.ஆர்.அம்பேத்கர்**

# *மாவை சேனாதிராசாவின் இராஜதந்திரம் தான் என்னே!*

**அ**ண்மையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தூதுக்குழுவில் இந்தியா சென்று வந்தபின்னர், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற, தமது கட்சியின் முன்னைநாள் தலைவரும், புலிகளால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டவருமான அ.அமிர்தலிங்கத்தின் நினைவு தினக் கூட்டத்தில் பேசினார். (அரசாங்கம் புலிகளை அழிக்கும் வரை தமது தலைவரின் ஆத்ம சாந்திக்காக ஒரு மௌனப் பிரார்த்தனை கூட செய்வதற்கு பயந்து இருந்தவர்கள் தான் இந்த வாய்ச் சவடால் வீரர்கள்)

அந்தக் கூட்டத்தில் வழமைபோல சில பொன்னான கருத்துகளை நமது 'தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு' மாவையார் அவிழ்த்து விட்டிருக்கிறார்.

அதாவது, இனிமேல் தாம் இராஜதந்திர ரீதியாக நடக்க வேண்டிய சூழல் உருவாகி உள்ளதாகக் குறிப்பிட்டிருக்கிறார். அப்பாடா! இப்பவாவது இதுவரை காலமும் தாம் இராஜதந்திர ரீதியாக நடக்கவில்லை என்று ஒப்புக் கொண்டாரே! அது போதும் இப்போதைக்கு.

அதேநேரத்தில் இன்னொரு மயிர்க்கூச்செறியும் திகில் கதையையும் அவர் அவிழ்த்து விட்டிருக்கிறார். அதாவது, புதுதில்லியில் தாம் இந்திய அரசாங்கத்துடன் என்ன பேசினோம் என்பதை தாமும் வெளியிட மாட்டோம், இந்தியாவும் வெளியிட மாட்டாது எனச் சொல்லியுள்ளார்! அவரது இந்தக் 'கதை'யைக் கேட்டதும் ஆளாள் தலையைப் பிய்க்கத் தொடங்கிவிட்டார்கள். 'சில வேளைகளில் இந்தியா படை கொண்டு வந்து இலங்கையைத் தமிழருக்குப் பிரித்துக் கொடுக்க ஏதாவது திகதி அறிவித்திருக்குமோ?' எனக் கூடப் பலர் அங்கலாய்க்கத் தொடங்கிவிட்டனர்.

மாவையின் அறிவிப்பால் உலக ரீதியாக பங்குச் சந்தை நிலவரங்கள் கூட மாற ஆரம்பித்துவிட்டது என ஒரு தமிழீழ ஆய்வாளர் வேறு மார் தட்டுகிறார்.

சரி, அது ஒருபுறம் இருக்கட்டும். மாவை சொன்ன இனிமேல் மேற்கொள்ள இருக்கும் இராஜதந்திர அணுகுமுறைக்கும், அவர் சொன்ன சஸ்பென்ஸ் கதைக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதோ என்று தயவுசெய்து ஒருக்கால் சிந்தித்துப் பாருங்கோ.

அவர் சொன்ன இராஜதந்திரத்தை நினைக்க ''எங்கப்பன் குதிருக்கை இல்லை'' என்ற கதை ஞாபகம் வரவில்லையா? *


படிப்பகம்

www.padippakam.com

'Vaanavil' is a registered member of the National Ethnic Press and Media Council of Canada
வானவில்

# யாழ்ப்பாணத்தில் பத்திரிகைச் சுதந்திரம் படும்பாடு!

அண்மையில் தமிழ் மொழியில் பயிற்சி பெற்ற 1633 இராணுவத்தினருக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் காங்கேசன்துறையிலுள்ள 'தல்செவன' விருந்தினர் விடுதியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் வசந்தி அரசரட்ணம் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டுக் கலந்து கொண்டார். அவருடன் யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் பொன்.பாலசுந்தரம்பிள்ளையும் கலந்து கொண்டார்.

இந்த இருவரும் கலந்து கொண்டமை சம்பந்தமாக தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுக்குச் சொந்தமான யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகை மோசமாக வசைபாடித் தீர்த்திருக்கிறது. குறிப்பாக தற்போதைய துணை வேந்தர் வசந்தி அரசரட்ணம் மீது அவதூறு சேற்றை வாரி இறைத்திருக்கிறது.

இதன்போது யாழ்.பல்கலைக்கழக மாணவர்களையும், விரிவுரையாளர்களையும் இராணுத்தினர் அச்சுறுத்துவதற்கு துணை வேந்தர் உதவியாக இருந்து வந்துள்ளார் என்ற பாரதூரமான ஒரு குற்றச்சாட்டையும் உதயன் அவர் மீது சுமத்தியுள்ளது. இலங்கையின் ஒரு உயர்கல்வி நிறுவனத்தின் பொறுப்பு வாய்ந்த நிர்வாகி மீதான உதயனின் இத்தகைய எழுந்தமானக் குற்றச்சாட்டு பத்திரிகா தர்மத்துக்கு எதிரானதும், பத்திரிகைச் சுதந்திரத்தை துஸ்பிரயோகம் செய்வதுமாகும்.


ஒரு உயர் கல்வி நிலையத்தின் தலைமை நிர்வாகி ஒரு மொழியியல் சம்பந்தமான நிகழ்வில் கலந்து கொள்வது தவறா? அதுவும் அந்த நிர்வாகியின் சொந்த மொழியை இன்னொரு மொழி பேசுவோர் கற்றுத் தேறினால் அது பெருமைக்குரிய விடயமல்லவா? அப்படியிருக்க துணை வேந்தர் அந்த நிகழ்வில் கலந்து கொண்டதை இனவாத அடிப்படையில் உதயன் தூற்றியுள்ளதைப் பார்த்தால், 'கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை?' என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

இலங்கையில் இனப்பிரச்சினை தீவிரமடைந்ததற்கு ஒரு பிரதான காரணம் மொழிப் பிரச்சினை என்று எல்லோருக்கும் தெரியும். அதில் 1956இல் பதவிக்கு வந்த பண்டாரநாயக்க அரசு கொண்டு வந்த 'சிங்களம் மட்டும்' சட்டமும் ஒன்று. அதுமாத்திரமில்லாமல், தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் வடக்கு கிழக்கில் தமிழ் தெரிந்த அதிகாரிகள் நியமிக்கப்படாமையும், ஆயுதப்படைகளில் போதியளவு தமிழ் பேசும் மக்கள் இணைக்கப்படாததும் ஒரு காரணம் என தமிழ் அரசியல் கட்சிகள் கடந்த காலத்தில் குற்றஞ்சாட்டி வந்துள்ளன.

ஆனால் அரசாங்கம் மொழி விவகாரங்களுக்கு என தனியான அமைச்சு ஒன்றை உருவாக்கி, அதன் மூலம் சிங்கள அரச ஊழியர்களுக்கும், சிங்கள ஆயுதப்படையினருக்கும் தமிழ் மொழியில் தேர்ச்சி அளிக்கும் போது அதை எதிர்க்கிறார்கள். ஆயுதப்படைகளில் தமிழ் இளைஞர்களையும், யுவதிகளையும் இணைக்கும் போது அதையும் எதிர்க்கிறார்கள். அப்படியானால் இவர்கள் எதனை எதிர்பார்க்கிறார்கள்? என்ன வேணும் இவர்களுக்கு?

இதனால்தான் 'தமிழன் என்றோர் இனம் உண்டு, தனியே அவர்க்கோர் குணம் உண்டு' என தமிழனிலேயே யாரோ ஒருவன் சொல்லிச் சென்றானோ என்னவோ?

உதயன் பத்திரிகையின் செயல்பாடுகளைப் பார்க்கும் சிலர், அதை "தமிழ் மக்களின் சாபக்கேடு" என்று வர்ணிக்கிறார்கள். அது சரி போலத்தான் தெரிகிறது. ஏனெனில்



எப்போ பார்த்தாலும் அது வெளியிடும் செய்திகள் இனங்களுக்கு மத்தியில் குரோதத்தைத் தூண்டுவனவாகவும், தமக்கு வேண்டாத அரசியல் கட்சிகள், தனிநபர்கள் மீது சேறு பூசுவதாகவும், சமூகத்தில் குரோதத்தை வளர்ப்பதாகவும் தான் இருக்கின்றது. அதுவும் அந்தப் பத்திரிகையின் பலத்தால் தமிழ் மக்களின் வாக்குகளை பெற்று பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் ஒருவரின் பத்திரிகை இவ்வாறு செயற்படுவதை உலகில் வேறெங்கும் காண முடியாது எனச் சொல்லலாம்.

வளர்ச்சியடைந்த நாடுகள் பலவற்றில் உதயன் பத்திரிகை செய்வது போல ஒரு ஊடகம் செயற்பட்டால், அது பாரதூரமான குற்றமாகக் கணித்து நடவடிக்கை எடுக்கப்படும். கனடா போன்ற ஜனநாயகத்தைப் பேணும் நாடுகளில் ஊடகமொன்று எந்த வடிவிலாயினும் இன, மத, நிற வேற்றுமைகளைத் தூண்டுவதோ, தனிநபர்களை அவதூறு செய்வதோ, வெறுப்புகளைத் தூண்டுவதோ பாரதூரமான குற்றம்.

ஆனால் உதயன் பத்திரிகை எவ்வித குற்றவுணர்வோ, கூச்சநாச்சமோ, சமூகப் பொறுப்புணர்வோ இன்றி அவ்வாறு செயல்படுகிறது. இலங்கையில் உள்ள பலவீனமான சட்டங்களும், ஊடக சுதந்திரமும் தான் உதயன் அவ்வாறு செயற்படுவதற்கான துணிவைக் கொடுத்திருக்கிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது. *


படிப்பகம்